
# எளிமை - மறைமுக மறைபொருள்கள்

பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா





# எளிமை - மறைமுக மறைபொருள்கள்

## பொருளடக்கம்


1. எளிமை------------------------------------------------------------1

௨. மறைமுக மறைபொருள்கள்--------------------------------------11

௩. தேவதெய்வங்களின் கற்பனா குணானுபவ லட்சணங்கள்-------௨7

௪. ஸ்வய அனுபவம்.

அ. ஸ்ரீபகவான் ஸ்துதி--------------------------------------௩௮

ஆ. பாடல்கள்----------------------------------------------௩௯

இ. கற்பனையின் கதை------------------------------------௪௨

ஈ. பொறுமையே பொக்கிஷம்-----------------------------௪௪

௫. காவிரி அன்னையுடன் உரையாடல்-------------------------------௪௮


எல்லாம் நீ!



ஓம்

# எளிமை என்றால் என்ன?

குழந்தாய்! எளிமை என்றால் இனிமை!

எளிமை என்றால் இதம். இதம் என்றால் இதயத்திற்கு சுகம் கொடுப்பது! இதயத்திற்கு சுகம் வேண்டுமானால் நாம் பேசும் வாக்கு இனிமையாக இருக்க வேண்டும்! அவஸ்யம் காரசாரமான, கொடுமையை கொடுப்பதான, பிறரை அடக்குவதான, அஹங்கார சொரூபமான, குரோத விரோதமான, சூது வாதான, (சூழ்ச்சி, குதர்க்க வாதம்) பிறர் மனதை புண்படுத்துவதான, காம எண்ணம் அதன் செயல்களான, [illegible]யாமையான, புரணி பேசுவதான, பழி வாங்குவதான, பேராசைக்கு ஏற்றதான, பொறுமைக் குணமான, சந்தேகத்திற்கு இடம் கொடுப்பதான, குல குடும்ப வெறியான, ஜாதி மத த்வேஷமான, தற்புகழ்ச்சியான, கேலி செய்வதான, உடல் உவகைப் பற்றியதான, சினிமா அரசியல் சம்பந்தமான, உறவு சுற்றங்களைப் பற்றியதான, பலி, பழி, பாபமான, தேவ தெய்வங்களை தூஷிப்பதான, குரு நிந்தனையான, உண்மையின் சாஸ்திர விரோதமான, தெய்வ நாமா, குருநாமா சம்பந்தம் இல்லாததான,

**"பரிபூரண சரணகதி இல்லாததான்"**

எந்த வார்த்தையும் பேசாதிருந்தால் இதய சுகம் கிடைக்கும்!

தெய்வ குரு சம்பந்தமான எண்ணத்துடன், இனிமையான வார்த்தை, இதமான வார்த்தை, மிதமான வார்த்தைகளை நிலை கண்டு, பொருள் கண்டு, இடம் கண்டு சுருங்கச் சொல்லி பேசி, பேசாமல் அடங்கி இருத்தலிலும், சாட்சியாக இருப்பதிலும் இதய சுகம் கிடைக்கும்!



௨

இந்த எளிமையும் இனிமையும் மறை சம்பந்தமானவை! அதாவது முன்பு சொன்னது இனிமையாகும்! இந்த எளிமையென்பது உணவு, உடை, இருப்பிடம், படிப்பு ஆகிய நான்கிலும் அடங்கும்.

1. உணவு :— உணவு எனச் சொல்லும் போது அந்த உணவு சைவமாகத்தான் இருக்கவேண்டும். அசைவ உணவு கூடவே கூடாது. இதைத்தான் எம் வள்ளுவன் சொன்னான்!

"கொல்லான் புலால் உண்ணான், (அஹிம்சையோன்)
எல்லா உயிரும் கை கூப்பித் தொழும்" என்றான்!

அனேக இடங்களில் இந்த புலால் (மாமிசம்) அருந்துவோர் சொல்வதுண்டு. அதாவது மாமிசம் சாப்பிட்டால் தானே உடம்பில் பலம் பெருகும்; எதையும் துணிந்து செய்யும் ஆற்றலும் உண்டு. மரக்கறியிலும் கீரையிலும் என்ன சக்தி இருக்கிறது என மாமிசமோகத்தால் சொல்வதுண்டு. இதை கவனித்தால் புரியும் மாடுகளும், குதிரைகளும், யானைகளும் இலை தழை, காய், கனி, புல், பூண்டுகளைத்தான் உண்கின்றன. இன்றைய மின்சார மோட்டாருக்கே "ஹார்ஸ் பவர்" (குதிரை வேகம்) என வைத்திருக்கிறார்கள். அந்த மிருகஜீவர்களுக்கே உங்களைக் காட்டிலும் பலம் அதிகம். உங்களுக்கு அதைவிட பலம் இல்லையெனச் சொல்லவாம். மேலும் இயற்கையாகவே இறைவனும் நமக்கு யாம் மேலே சொன்ன சாதுபிராணிகளைப் போல் பற்களை தட்டையாகவே அமைத்திருக்கிறான் உணவுகளை அரைத்துச் சாப்பிடும் நிமித்தம். சிங்கம், புலி, சிறுத்தை, நம் வீட்டு நாய், பூனை இவைகளுக்கு மாமிசங்களை கிழித்து உண்ணும் நிமித்தம் இறைவன் அமைத்திருக்கிறான். ஆகவே புலால் (மாமிசம்) உண்ணவேண்டாமென்று உங்கள் திருத்தாள் பணிந்து கேட்டுக் கொள்கிறோம்.

கூர்மையாக

மேலும் உணவு நமக்கு மூன்று விதங்களில் வேலை செய்கிறது. அதாவது நாம் உண்ணும் உணவு ஒருபகுதி மலமூத்திரங்களாகவும், ஒருபகுதி இரத்தம், கொழுப்பு, தசைகளாக சரீரத்திற்கும், ஒருபகுதி மனதிற்கும் பயன்படுகிறது. நமக்கு மற்றைய இரண்டும் முக்கியமல்ல மனம் முக்கியம்.



2

ஆகவே நம் உணவு மிதமாக (குறை)வாகவும், இதமாக (எளிதில் ஜீரணம், மனதை பாதிக்காமல்) மாகவும், எளிமை (பசிக்கு உணவே தவிர ருசிக்கு உணவல்ல) யாகவும், திருப்தி (எந்நிலையிலும் போதும் என்ற நிறைவுடனும்) புடனும் இருக்க வேண்டும். இதில் உணவு ஏற்கும் போது முழுகவனம் வேண்டும், அதாவது

"முட்டைக்கோழி தவிட்டை விழுங்குவது போல லபக், லபக் என்றே கபக், கபக் என்றே வாயில் போட்டு விழுங்கக் கூடாது."

"அதை கொடுத்த இறைவனுக்கு நிவேதனம் பண்ணி சாப்பிடு."

உன் உடலும், உலகமும், அதன் பொருள்களும் "இறைவனுடையது" அவனால் கொடுக்கப்பட்டதை அவன் நாமாவை சொல்லி அவனுக்கு அர்ப்பணம் செய்து சாப்பிடு.

"நீ இறைவனுக்கு நிவேதனம் பண்ணி சாப்பிட்டால்"

அந்த ஆகாரத்தின் குணங்கள், அதாவது வலிமையான தோஷங்கள், அதாவது விபரீத எண்ணம், விபரீத தோற்றம் அதன் நச்சுத்தன்மை கோரகுணங்களின் வலிமையும், பிறப்பிறப்பின் வினைப் பெருக்கமும்

**"இவை அனைத்தும் பஸ்பமாகும்"!!!**

குழந்தாய்!

ருசிக்கு உணவை அருந்தாதே!
பசிக்கு உணவை அருந்து!
ஆடம்பர உணவை அருந்தாதே!
அதிக உணவை அருந்தாதே!
இதமான உணவை அருந்து!
(சற்று) குறைவான உணவை அருந்து!
(கோபத்துடனும் ஆத்திரத்துடனும்) → கோபம், ஆத்திரம், அவசரமாகவும் உணவை அருந்தாதே!
பொறுமையுடனும் வாய் பேசாமலும் உணவை அருந்து!
அசைவ உணவு அருந்தாதே!
சைவ உணவு அருந்து!
சிரித்துக்கொண்டே உணவை அருந்தாதே!
இறைசிந்தனையுடன் உணவை அருந்து!

உணவை கொடுத்தவனையும், அவன் கருணையையும் எண்ணி எண்ணி அகமகிழ்வாக உணவை உட்கொள்வாயாக!!!



2

குழந்தாய்! ஒன்றை உன்னிப்பாய் கவனிக்க வேண்டும்!

**கொடுத்ததை நினைக்கிறாய்!** (பொன், பொருள், உணவு, உடை, இருப்பிடம்)

**கொடுத்தவனை மறந்து விட்டாயே!!** : உணவு கொடுத்தான்; உடை கொடுத்தான். உனக்கு இருப்பிடம் கொடுத்தான்; உனக்கு தாய் தந்தை கொடுத்தான்; உன் சுகத்திற்கு மனைவியை கொடுத்தான்; உன் வாரிசுக்கு குழந்தை கொடுத்தான். படிப்பை கொடுத்தான்; பட்டத்தை கொடுத்தான்; பணம் கொடுத்தான்; தொழில் கொடுத்தான்; எண்ணற்ற போகங்களைக் கொடுத்தானே!!!

அவனை மறந்து நான் செய்கிறேன் என்றும், என்னால் முடியும் என்றும் என்னுடையவைகள் என்றும் மார்தட்டிக் கொள்கிறாயே!!! என்ன அறியாமை??

குழந்தாய்!

எதை கொடுத்தாலும், எதை வாங்கினாலும், எதை உன் வாயில் போட்டாலும், எக்காரியத்திலும் இறைவனை எண்ணி செய்யக் கடவாய். அப்போது தான் உய்வடைவாய்!

2. உடை :- இந்த கலியுக நாகரீகத்திலும், கம்ப்யூட்டர் காலத்திலும், மேலை நாட்டு நாகரீகம் அங்கு தலைவிரித்து ஆடும் இந்த நேரத்திலும் உடையைப் பற்றி எழுதுவது அத்தனை திருப்தியாக இராது! ஆனாலும் தர்மத்தின்படி ஒன்றிரண்டை சொல்லி முடிக்கிறோம். உலக ஆடம்பரத்திலும், "ஊரோடு ஒத்துவாழ்" என்ற நியதியிலும் வாழும் ஜீவர்கள் எப்படி இருந்தாலும் பாதகமும் தோஷமும் இல்லை. அவர்கள் "கண்டதே காட்சி, கொண்டதே கோலம்" என இருப்பார்கள்! ஆனால் ஆத்ம சாதனை செய்யும் நீங்கள் அணியும் ஆடைகள் "கூத்தாடிகள் உடுத்தும் கோமாளி ஆடையாக இருக்க வேண்டாம்"; "குடும்பஸ்தர்களும் நற்றுணை ஏற்கும் சாதனையாளர்களும் ஏற்கும் "பருத்தி நூல்" கதராடையாக" இருந்தால் நலம்" இதில் தான் உங்கள், நலம், சுகம், குணம் இவைகளின் இனிமை எளிமை அடங்கும்! எளிமையான உடை உடுத்தும் போது உங்கள் உள்ளம் உயரும். அஹங்காரம் அபிமானம் தாழும்! எளிமையான உடை உடுத்தும் போது உங்களை நீங்கள் உணர முடியும்; பிறர் மேலுள்ள கவனம் தவிர்க்கப்படும்! எளிமையான உடை உடுத்தும் போது தான்



உ

பயம் நீங்கும்; படாடோபம் ஒழியும்! எளிமையான உடை உடுத்தும் போது தான் கவனம் பிறரை பார்க்கத் தோணாது, நிலமகளையும் இயற்கையையும் (இறை சொரூபத்தை) பார்க்கத் தோணும்! எளிமையான உடை உடுத்தும் போது தான் வார்த்தைகளும் உங்களுக்கு அடங்கி வரும்; தடித்த வார்த்தை வராது! எளிமையான உடை உடுத்தும் போது தான் எதிராளியின் ஆடம்பரம் அஹங்காரம், கௌரவம் முதலிய துர்க்குணங்களை கண்டு நாம் பணிந்து விலக முடியும்! முடிவில் எளிய உடை உடுத்தினால் உடல் ஆரோக்யமும் (சுகாதாரமும்) மனத் தெளிவும் பெற முடியும்! எளிமையான உடை உடுத்தினால் தான் இதமாகவும், மிதமாகவும் பேச முடியும், பணிவும் உள்ளத் தெளிவும் நமக்குத் தாமே உண்டாகும்!

3. இருப்பிடம் :- இருப்பிடம் என சொல்லும் போது இந்த கலிகால நாகரீகத்தில் சீட்டுக் கட்டை அடுக்கி வைத்தது போல் மாடி மேல் மாடி கட்டி விண்ணை நாடி நிற்கும் இந்தக் காலம்

"குடிசையும், மண் வீடும், நலம் எனச் சொன்னால்
அது பொருந்தாது தான் !!!"
ஆனாலும்??

அதை மிஞ்சிய சுகம் எதிலும் அமையவில்லை. இதை எழுதும் போது உங்கள் அனைவருக்கும் இது தான் தோன்றும்;
இந்த தபோவனம் மட்டும் என்னவாம்? ஓர் ஜீவனுக்கு ஓர் பெரிய பங்களா; ஓர் மாளிகை போன்ற பேலஸ்; இவர் எளிமையை சொல்வ என்ன யோக்யதை இருக்கிறது என கேட்கத் தோன்றும்!

குழந்தைகளே!
இந்த வைத்தியம் திருமந்திர நகரிலும் (வீடு, கடைகள், தொழிற்சாலை) திரு அண்ணாமலை (அண்ணாமலை ரமண குடீரம்) பேலஸ், இதற்கு முன்பும் எங்கெங்கோ எப்படி எப்படி எல்லாமோ இந்த "மண் பொம்மை" இருந்தது தான். அவை அனைத்தும் கல்லும் மண்ணும்" தானே அதை போல் இதுவும் கல் மண் தானே எனச் சொல்லும் போது நீங்களும் கேட்கலாம் அப்போது நீங்கள் இருக்கும் வீடுகளும் (பேலஸ் மாளிகை) கல் மண் தானே எனக் கூறலாம் ஆனால் உங்கள் வீட்டுக்கு ஓர் கேடு வந்தால் அதை உங்களால் ஏற்றுக் கொள்ள முடியுமா? சற்று சிந்திக்கவும் உங்கள் வீட்டின், "என்னுடையது என்ற அபிமானமும், நான் கட்டிய வீடு, அது என்னால் தான் முடிந்தது என்ற அஹங்காரமும்" உங்களிடம் பூரணமாக அழிந்திருந்தால் நீங்களும் எங்கள் வீடு கல்லும் மண்ணும் தான் என சொல்லலாம்!



2

அது பொருந்தும். அந்நிலை பெற்றுவிட்டால் நீங்கள் உணர்ச்சிகளை வென்றவராவீர்! நீங்கள் அவாவை அறுத்தவராவீர்! நீங்கள் ஸ்வய அனுபவ ஞானம் பெற்றவராவீர். அதுவே எளிமை, அதுவே இனிமை! எம் அன்பின் முத்துக்களே!

"எளிமை இனிமை" என்றால் எதிலும் விகாரம் தோற்றமும் அது பற்றி விவகாரிக்காமலும் வாக்கும் எண்ணமும் அடங்கியிருப்பதாகும்.

"எளிமை இனிமை" என்றால் போட்டி பொறாமை, கூச்சல், குழப்பம், பயம், கவலை ஆகிய எந்த குணாதிசயங்களும் இல்லாமல் அடங்கியிருப்பதாகும்.

"எளிமை இனிமை" என்றால் எந்நிலையிலும் எக்காலத்திலும் காண்பதிலும், கேட்பதிலும் பேசுவதிலும் உணர்வு பூர்வமாய் அஹங்கார அபிமானமில்லாதிருப்பதாகும்.

"எளிமை இனிமை" என்றால் எந்த வினாடியும் இறைநாமஸ்மரணையும் குருநாமஸ்மரணையும் கொண்டு இருப்பதையும் நடப்பதையும் அமைதியாக ஏற்றவராகும்.

"எளிமை இனிமை" என்றால் எங்கும் குறைவு நிறைவுகள் தோற்றினால் மனசாந்தியாக ஏற்று எண்ணங்களை அழித்து வாக்கை நிறுத்தி அமைதி காத்தவராகும்!

"எளிமை இனிமை" என்றால் உணவோ உடையோ, இருப்பிடமோ எத்தனை குறைவாக, மிகமிக ஏழ்மையாக கிடைத்தாலும் அவற்றை ஈஸ்வரார்ப்பணமாக ஏற்றல்.

"எளிமை இனிமை" என்றால் உணர்வு பூர்வமாக **வாக்கில் இனிமையும், வாழ்க்கையில் எளிமையும்** கொண்டு இறை நினைவாக இருப்பதாகும்.

குழந்தைகளே!

இனிமையையும், எளிமையையும் பற்றி பக்கம் பக்கமாக எழுதலாம்; நாட்கணக்கில் பேசலாம். ஆனால் அது அனுபவத்தில் வருவது சற்று கடினம்தான்! ஆனால் எவருக்கு இறைபக்தியும், குரு உணர்வும் கூடி இருக்கிறதோ அவர்களுக்கு இது மிகமிகமிக சுலபமாகும். குற்றம் குறைகள் தோற்றுகிறதே அவைகளை எப்படி நிறைவு செய்வது என நீ கேட்கலாம். "குற்றம் குறைகள் இருந்தால்தானே உலகம்". உலகை நீ இல்லாமல் செய்ய முடியுமா? "நீ இல்லாமல் போ". நீ இறந்தால் அங்கு குற்றம் குறைகள் ஏது? என்றென்றும் நீ ஒருவன்தானே? இருவர் இல்லவே இல்லை. நீ உண்மையில் ஒன்று. உன் உணர்வுகளை (அஹங்கார அபிமானங்களை) அழி. அங்கு மிஞ்சி இருப்பது நீ ஒருவனே! "அது நீயே, நீயே அது".



ஓம்

அன்பின் குழந்தைகளே!

உங்கள் நாவு அடக்கத்தினால் தூல வினை கழிந்து மனோ நலம் பெறுவீர்களாக! உங்கள் மனோ அடக்கத்தினால் (கற்பனை குறைந்து குறைந்து அழிந்தால்) ஜீவ களை களைந்து அதனால் ஆத்மசுகம் பெறுவீர்களாக!

ஸ்ரீ சத்குருவின் வாக்கியார்த்த சிரத்தையே உங்கள் சத்குரு சேவையுமாகும் ஜீவன் முக்தியுமாகும்!

குழந்தைகளே!

முடிவாகச் சொல்கிறேன்!

தேவைகளை குறைப்பீர். ஆசைகளை கொஞ்சம் கொஞ்சமாக விலக்கி எதிலும் போதும் என்ற திருப்தி யுறுவீர்! தேவைகளும் விலக்கமுடியாத ஆசைகளுமே உலகம். அதுவே பந்தம் ஆகும்! அதுவே வினைப்பெருக்கம். அதுவே ஜனனமரணமாகும்!

எளிமையான வாழ்க்கையே உங்கள் சாதனையாகும்!
எளிமையான வாழ்க்கையே தேவையும் ஆசைகளும் குறையும்!
எளிமையான வாழ்க்கையே மனதில் ஓர் நிறைவை கொடுக்கும்!
எளிமையான வாழ்க்கையே பொன்பொருள் மோகத்தை அழிக்கும்!
எளிமையான வாழ்க்கையே காமஎண்ணத்தை அகற்றும்!
எளிமையான வாழ்க்கையே மனஎண்ணங்களை மாய்க்கும்!
எளிமையான வாழ்க்கையே உங்கள் தீய குணங்களை அழிக்கும்!
எளிமையான வாழ்க்கையே சத்குருபக்தியை உயர்த்தும்!
எளிமையான வாழ்க்கையே சத்வகுணத்தின் இருப்பிடமாகும்!
எளிமையான வாழ்க்கையே உறுதி, சாந்தி, அமைதி, ஆனந்தம் கொடுக்கும்

மேலே கண்ட எளிய வாழ்க்கையில் இந்த பத்து செல்வங்களையும் நீங்கள் பெற்றுவிட்டால் இந்த பத்தினால் பற்றற்ற நிலை அவசியம் பெறுவீர்! ஸ்ரீ சத்குருவிடத்திலும், ஸ்ரீ தெய்வத்திடத்திலும் படாடோபம், (ஆடம்பரம்) வியாபாரம் (எதிர்பார்ப்பு) விளம்பரம் (கீர்த்தி, புகழ், அந்தஸ்து, பட்டம், பதவி, தனக்கொரு சலுகை) வேண்டவே வேண்டாம்!



2

குழந்தைகளே!

ஆஸ்ரமப் பணி உங்களுக்கு வேண்டாம், ஆத்மப் பணி வேண்டும்!

இது "அன்பின் குடிலே" தவிர ஆஸ்ரமம் அல்ல!
அன்பிற்கும் பணிவுக்கும் இடம் உண்டு, பகட்டுக்கும், அதிகாரத்திற்கும் இடமில்லை!
இங்கு எதிர்வாதமும் வேண்டாம். எதிலும் விட்டுக் கொடுக்க வேண்டும்!
அன்பாகவும், அடக்கியும் பேசு! அடக்கப் பேசாதே! எதிர்த்தும் பேசாதே!
பேசாதிருக்கவும் பழகு! எதிலும் நிலை கண்டு ஒதுங்கிப் பழகு!
பணிவு வேண்டும்! பகட்டும் வேண்டாம்! புகழ்ச்சி இகழ்ச்சி வேண்டாம்!
பொறுமை வேண்டும்! வேண்டியவரை புகழாதே! வேண்டாதவரை இகழாதே!
இவ்விருவரையும் பற்றி "புறணி" (கேலி, கிண்டல், நையாண்டி) பேசாதே!
எவரிடமும் அதிகாரம் பண்ணாதே! அனைவரிடமும் பணிந்தும் கனிந்தும் செல்!

குழந்தைகளே!

இன்றைய கலியுகத்தில் சாதனை செய்பவர்களிடமும், அதை போதிக்கும் ஞானிகளிடமும் வாழ்ந்து காட்டும் நெறிமுறை (புறஒழுக்கம், அகஒழுக்கம்) காணப்படுவதில்லை. ஆனால் அவைகளை போதனை முறையில் போதிக்கப்படுகிறது. சாதனையாளர்களிடமும் போதனையாளர்களிடமும் "பொன் பெண்"!!! ஆசைகள் அழிவதில்லை. இது ஓர் விஷ சர்ப்பம்; இது தீண்டினால் அணு அணுவாக சிதைத்துக் கொல்லும். (உடனே கொல்லாது) சாதனையாளர்களாகிய நீங்கள் மேலே சொன்ன இரண்டிலும் சர்வ ஜாக்ரதையாக இருங்கள்.

"உங்களை குறை கூறுபவர்களையே அதிகம் நேசியுங்கள்"!!!
"புகழ்பவர்களை அண்டாதீர்"!!!

நீங்கள் அவர்களின் இகழுரைகளை இன்முகமாகவும் பணிவாகவும் ஏற்கப் பழகிக் கொண்டால் உங்கள் சாதனைகளில் அவசியம் அதிதுரிதமாக வெற்றி பெறுவீர் இது உறுதி!

"பணம்" ஓர் உயிர் கொல்லியே! ஆனால் அது இல்லாமல் இவ்வுலகில் வாழ முடியாது தான்! ஆனால் அதற்கு அடிமை ஆக வேண்டாம்! "புகைபுகா இடத்திலும் "பொருள்" ஊடாடி கெடுத்து விடும்"! என ஓர் பழமொழி உண்டு!



“இரைக்குரியதை தேடினால் இறைவனை மறந்து விடுவோம்”
“இறைவனை தேடினால் இரை உங்களை தேடிவரும்.”
உடல் சிரமம், பணக் கஷ்டம், தாங்க முடியாத சோதனைகள் இறைவனை அடையும் படிக்கட்டுகளாகும்!
உலக சுக போகமான வாழ்க்கையும், அதன் இனிமையும், சொர்க்காதி பதவியும் இறைவனை மறக்கடிக்கும் கிரியைகளாகும்!
இந்த உலகையும், உலகவஸ்துக்களையும் உன் மனைவி மக்களையும் உன் வினையின்படி சிலகாலம் விளையாடக் கொடுத்தான்!
அதையும் தற்காலிக உண்மையாக்கிறானே தவிர நிரந்தர உண்மையாக்கவில்லை. ஆகவே மேலே சொன்னவைகள் வந்து, இருந்து, மாறி, மறைகின்றன. அவைகளின் மேல் தீராத மோகம் கொண்டதால்தான் வினைகளும் பிறப்பிறப்பும் தோன்றுகின்றன.

குழந்தைகளே! கொடுத்தவனை நினைக்காமல் கொடுத்தவைகளையே நினைத்தால் வினைதானே தொடரும்! இறைவன் விளையாட கொடுத்தவைகளை தனதாக பாவனை பண்ணி வினையமாக கொண்டால் இதற்கு இறைவன் பொறுப்பா? அல்லது ஜடமாகிய பொருள்கள் தான் பொறுப்பா? இல்லவே இல்லை “நீதான் பொறுப்பு!”
“உலகவாழ்க்கைக்கு அவசியம் சேமிப்பு தேவை”!
“உண்மையின் உயர்வுக்கு அவசியம் சேமிப்பு தேவை இல்லை”!
“சேமித்து வைத்தவனுக்கு அதை பாதுகாப்பதில் பயம் கவலை”!
“சேமிப்பு இல்லாதவனுக்கு இறை அருளில் துடிப்பு ஆனந்தம்”!
சேமிப்பு இல்லாதவனை அவன் க்ஷேம லாபங்களை அவசியம் இறைவன் கவனித்துக் கொள்வான்!
அவன் ஓகோ என உலகம் வியக்க வாழ முடியாது (அது வேண்டாம்) அவன் தனக்குள் ஆகா! இறைவனின் கருணையே கருணை என்று ஆனந்தமாக மனோ சிரமம் இல்லாமல் வாழ்வான்!
நீ சாதனை செய்பவன் உன் மீது தான் உனக்கு கவனம் இருக்கவேண்டும்! அடுத்தவன் மீது கவனம் செலுத்தாதே. எந்த அளவுக்கு உன் மானம் அவமானங்களை இழக்கின்றாயோ அந்த அளவுக்கு நீ உன் சாதனையில் முன்னேற முடியும்! சூடு, சுரணை, மானம், அவமானம் வட்சை ரோசம் இருந்தால் அவசியம் நீ வெற்றிபெற முடியாது!



உ

ஏனைய குருமார்கள் (சாமான்ய குரு அல்லது சற்குரு) சேவை
யிலும் அவர்கள் போதனையிலும் இருந்தால் உலகம் புகழும்
அளவுக்கு சக்திகள், வல்லமைகள், சித்திகள், மற்றும் அனேக
வித்தைகள் பெருகும். ஆங்கு சாந்தி அமைதி திருப்தி உறுதி
பெருகாது; ஆத்மஞானமும் பெருகாது!

ஆத்மஞானகுரு (ஸ்ரீ சத்குருதேவரிடம்) அவர்கள் சேவையிலும்
அவர்கள் போதனையிலும் இருந்தால் முதலில் திருப்தி
உண்டாகும். பின் சாதனையில் உறுதி உண்டாகும். பின்
மேலும் மேலும் அவர்கள் சாதனையினால் ஆத்மசாந்தியும்
அதனால் மனமும் அழிந்து (மஹத்தாகி) ஆத்மஞானமாகிய
ஆத்ம சாட்சாத்காரமும், பிறவாநிலையும் அதாவது
ஜீவன் முக்தியும் அவசியம் பெறமுடியும்!

ஸ்ரீ சத்குருதேவரிடம் பணிபுரிபவர்களுக்கு ஆரம்பத்தி
லேயே கொடூரமான வஞ்சகம், பொறாமை, பேராசை
குரோதம், தற்புகழ்ச்சி, ஆடம்பரம், விளம்பரம் வியாபாரம்
பிறரை பழிவாங்குதல் முதலிய ஆத்மசாதனையின் எதிரி
ளான தீய சக்திகள் பஸ்பமாகும்.

ஹே ஆத்மஞானக் குழந்தைகளே!

1. நீங்கள் சாதனை செய்ய வந்தீர்கள். பிறர் சாதனைகளை கவனிக்க அல்ல!
2. உங்களுக்கு பணம், பதவி, புகழ் வேண்டாம். நற்பண்பு (சற்குணம்) வேண்டும்!
3. உங்களுக்கு விரோதம், வஞ்சனம் வேண்டாம். பணிவும் கனிவும் வேண்டும்!
4. எதிர்பார்ப்பு இருந்தால் ஏமாற்றம் அடைவீர்; அது நாம் என உறுதி இருந்தால் அது
5. சந்தேகம் இருந்தால் சஞ்சலம் அடைவீர்; உறுதி இருந்தால் அது ஆவீர்! ஆகுவீர்!
6. ஜாதி, மொழி, மதம், இனம் பேதம் வேண்டாம்; அனைத்தும் ஒன்றே என உணர்வீர்!
7. (மூன்று) காலங்களை எண்ணினால் மரணம்; காலம் கடந்தால் ஜீவன் முக்தி!
8. நான் எனது இருந்தால் அவன் ஜீவனே; நான் எனது அற்றால் ஜீவன் முக்தனே!
9. ஆண் பெண் என்றால் பேதம் உண்டு; அனைத்தும் ஆத்மா என்றால் ஜீவன் முக்தி!
10. உலகம் என்றால் ஜடம்; அதை நான் எனது என்றால் ஜீவன்; அதை நீ உனது என்றால்
தெய்வம்; அனைத்தும் காலாதீத ஒன்றே என்றால் அதுஞானம்!

குழந்தைகளே! அடங்கி இருப்பீர்களாக!
அடங்காண்ணாதீர்! உங்கள் சாதனை உங்களுக்கே
அது பிறருக்கு இல்லை! சத்குரு உங்களுக்கு வெளியில்
இல்லவே இல்லை; அவர் உங்களுள் இருக்கிறார்!!!!



# ஓம்

# மறைமுக மறை பொருள்கள்!!!

ஓம் அன்பும் அறிவும் நிறைந்த ஞானக் குழந்தைகளே!
உங்களுக்கு மன நிறைவும், ஆத்ம பொலிவும் உண்டாவதாக.
நமது வேதசாஸ்திரத்தின்படி அமைந்த வாக்கியங்கள்;
"நடப்பதெல்லாம் நாராயணன் செயல்"!
"அனைத்தும் சிவன் செயலே"!
"அவனன்றி அணுவும் அசையாது"!
என இன்னனும் இறைநிலையைப் பற்றிய வாசகங்கள்
பல நூற்றுக் கணக்காகவுண்டு. இதன் பொருள்களும் தாங்கள் அனைவரும் அறிந்ததே! இதை சற்று உட்புகுந்து
பார்த்தால் உங்கள் வாழ்க்கை என்பதென்ன?
உங்கள் சாதனை என்பது என்ன? என்பது தெளிவாகும்.

குழந்தைகளே!

இறைவன் தம் மாயையால் இவ்வுலகை
படைத்தான். ஆனால் மனுஷ படைத்த மனிதன் இவ்வுலகை
ஆளவந்தவனே தவிர, வாழவரவில்லை. இதன் உண்மையை
உணர்வீர்.

ஆளவந்தவன் :- இறைவனால் உண்டுபண்ணிய உலகை
இறை நாம தியானத்துடன் அவன் **அனுமதியும்** பெற்று (ஆள)
**போகபோக்யங்களை ஆட்சி** செய்ய வந்தானே தவிர
அவைகளுக்கு அடிமையாக இருக்க வரவில்லை.

**வாழவரவில்லை** :- இறைவனால் உண்டுபண்ணிய உலகையும் அதன் பொருள்களையும் தனதுடைமையாக்கி "நான்,"
"என்னால்" "என்னுடையது," என்று அஹங்கார அபிமான
மோஹத்தினால்



உ

அவைகளுக்கு அடிமையாக வரவில்லை. இதைசற்று ஆழ்ந்து
சிந்தித்தால் அதன் உண்மையை உணர முடியும். அதாவது
உலகமும் அதன் பொருள்களும் வெறும் அறிவற்ற
ஜடசொரூபமே; உன் உடலும் அறிவற்ற ஜட சொரூபமே.

ஆனால்?

"உடல் புண்ணிய பாப மூட்டையின் சொரூபம்"!
"உலகம் அதன் அனுபவ போகப் பொருள்கள்"!

இதை இறைவன் பொருள்களாகவும், அவன் போகமாகவும்
அவன் அனுபவமாகவும் விட்டுவிட்டால் தற்காலிக
மாக எடுத்த சரீரத்தோடு முடிந்துவிடும்.
இதை நான் என்றும், என்னால் என்றும், என்னுடையது என்றும்
அஹங்கார அபிமானம் கொண்டால், விட்ட குறைகளை விட்ட
நிலையில் அனுபவிக்க பல பிறவி எடுக்க வேண்டி வரும்.
இறைவன் மாயையைப் பற்றிய நிலையில் இருக்கிறான்.
ஜீவன் மனதால் பற்றப்பட்ட நிலையில் இருக்கிறான்.

குழந்தைகளே!

அனைத்தும் ஈசன் செயலென்றும்; இறைவன்
செயலென்றும்; நாராயணன் செயலென்றும்; அவனன்றி அணுவும்
அசையாதென்றும் கூறும் மொழிகள் அனைத்தும் ஸத்யமே!
ஆனால் உங்கள் நிலை எப்படி இருக்கிறதென்றால்
"காணம் என்றால் வாயை திற என்றும்"
"கடிவாளம் என்றால் வாயை மூடு என்றும்" இருக்கிறது.
இன்பமான காரியம் நடைபெற்றுக் கொண்டிருந்தால்
நான் நினைத்தேன் சாதித்துவிட்டேன் என்றும்; என்னால் தான்
இது முடிந்தது என்றும்; நான் தேடியது எங்கப்பன் தேடியது
என்னுடையது என்றும் கர்மா சரீரத்தில் மார்தட்டிக்



உ

கொண்டு அஹங்கார அபிமான சொரூபிகளாக உள்ள
கர்மாவை அனுபவிப்பதோடல்லாமல் மேலும் பிறவிக்கு
வித்தாகிய ஆகாமிய கர்மாவையும் தேடிக்கொள்கிறீர்கள்.
துன்பம், துயரம், கஷ்டம், கவலைக்கிடமான காரியங்கள்
நடைபெற்றால் இது இறைவன் செய்யும் சூழ்ச்சி என்றும், இது
யார் செய்த தீவினையோ என்றும் புலம்பித் தீர்த்து அந்த
புலப்பத்தால் (வாக்கால்) மேலும் பிறவிக்கு வித்தாகிய
ஆகாமிய கர்மாவையும் தேடிக்கொள்கிறீர்கள்.

இதை சற்று கவனிக்கவும்.

குழந்தைகளே!

இப்பெரிய உலகம் ஓர் நாடக மேடைதான்.
அதில் உள்ள அனைத்துப் பொருள்களும் உங்கள் வினையின்
படி விளையாட கொடுத்தவைகளே. உங்கள் புண்ணிய பாப
வினையின்படி தான் உங்களால் விளையாட முடியும். வினை
இல்லையானால் உங்களால் விளையாட முடியாது தான்.
புண்ணிய பாப வினை நீங்கள் தேடியது. ஆனால் மனம்
நீங்கள் தேடியதல்ல. உங்கள் விளையாட்டின் நிமித்தம்
அதுவாக "உங்களை பற்றிக் கொண்டது".
உலக பொருள்கள் அனைத்தும் புண்ணிய பாப வினை சொரூபம்.
அதை பற்றி விளையாடும் மனம் குண சொரூபம்.
இதில் வினை தோற்றுவதில்லை, ஆனால் குணம் தோற்றும்.
சத்வ குணம் ஒன்றே இறை சொரூபம்!
ரஜோ, தமோ குணங்கள் உலக பொருள்களின் சொரூபம்!
இந்த முக்குணங்களையும் சற்று உன்னிப்பாய் கவனித்தால்
நாம் எப்படி உலகில் விளையாட வேண்டும் எனத்தெரியவரும்.



உ

ஸத்வ குணம்:- இக்குணத்தின் அடிப்படையே "**பொறுமை**".
இதன் அங்கங்கள், அன்பு, அஹிம்சை, தயை,
தானம், குற்றங்களை மறத்தல், மன்னித்தல்,
விட்டுக்கொடுத்து விலகுதல், எந்த நிகழ்ச்சிகளி
லும், காட்சிகளிலும், வார்த்தைகளிலும் தீயதாக
பாராமை, தீயதாக கேளாமை, தீயதாக பேசாமை,
கருணை, காருண்யம், சாந்தி, பிறரைப் புண்படுத்
தாத சிரிப்பு, எதையும் தலை வணங்கி ஆனந்த
மாக ஏற்றுக் கொள்தல், இவை அனைத்திற்கும்
மூல காரணம் இறை, குரு நாமாவில் பரிபூரண
**சரணாகதி** !!!

ரஜோ குணம்:- இக்குணத்தின் அடிப்படையே "**பொறாமை**".
அதாவது எதையும் பொறுக்க இயலாமை. இதன்
அங்கங்கள். இதன் மூல அஸ்திவாரம் **பேராசை**
அதாவது பெரிய ஆசை; அதாவது பெயரளவில்
ஆசை. காரணம் இது அழிவுப்பாதை. மேலும்
கள்ளம், கபடம், சூழ்ச்சி, வஞ்சகம், வெறி,
ஈயாமை, கடும் காமம், தீராத மோஹம்,
கொலை, போட்டியில் ஆரம்பம் ஆகி பின்
கோட்டியாய் (பைத்தியமாய்) முடிவது. இவை
அனைத்திற்கும் மூல காரணம் "**நான்**" என்ற
"**அஹங்காரம்**" ஆகும்.

தமோ குணம்:- இக்குணத்தின் அடிப்படையே **சோம்பல்**.
இதன் அங்கங்கள் "**தூக்கம்**". இதன் முடிவு துக்க
த்தில் முடியும். பிறகு பார்க்கலாம் நாளை பார்க்க
லாம் என இயலாமை அல்ல ஒத்திப் போடுவது.
எந்நிலையிலும் சந்தேகம், இனமத வெறி,
குதர்க்கம், பிடிவாதம், உணவில் அதிக சுவையை



உ

விரும்புவது, காண்பதிலும் கேட்பதிலும் தீராத மோஹம்; சிற்றின்பத்தில் பிரியம், ஏக்கம், கவலை எந்நிலையிலும் பயம், சுபவம் அதாவது சின்னச் சின்ன ஆசைகள். விளக்கம் தமக்கு சரிவரத் தெரியாத் தன்மையினால் குற்றம் குறைகள் காண்பது, இறை, குரு, நாட்டத்தில் சிரத்தை இல்லாமல் பாடம் படிப்போடு அனுபவம் பெறுதல், வார்த்தையிலும் செயலிலும் சமத்வ உடன்பாடு இல்லாமை இவை அனைத்தும் ஒருங்கிணைந்த உலக சம்பந்த உடல் சம்பந்த, வார்த்தை சம்பந்த "**மமாபிமான**" விடமுடியாத "**எனது என்ற அபிமானமாகும்.**"

"**நிர்க்குணம்**" என்பது பரசொரூப ஸ்திதியாகும்.

அன்புக் குழந்தைகளே!

குணங்களின் லட்சணம் சொன்னோம். முடிவில் உங்களுக்கு பிறவி வரும் ரகஸ்யம் சொல்கிறோம் கவனமுடன் உணர்வீர்களாக. நிர்க்குணம் பரசொரூபமாகும். ஸத்வகுணம் தெய்வ அம்ஸமாகும்; ரஜோ தமோகுணம் மனிதப்பிறவி கிடைப்பது சற்று கடினமே. மற்றும் நடப்பன, ஊர்வன, பறப்பன, நீந்துவன முதலியனவும் மரம், செடி, கொடி, புல் பூண்டு ஆகியவைகள் அவஸ்யம் உண்டு. கண்களுக்குத் தெரியாத கிருமி கீடங்களும் உண்டு.

இதில் ஓர் உண்மை என்னவென்றால்?

ஸத்வ குணம் ஏற்றால் அது மேல் நோக்கி செல்லுமே தவிர அவஸ்யம் கீழே தள்ளாது. அதாவது வசதியான பிறவிகளும், மேலான பிறவிகளும், தேவ தெய்வ அம்ஸம் பெற்ற அந்த பிறவிகளும் அவஸ்யம் உண்டு. இதில் மேலும் வேதாந்த கருத்துக்களை ஏற்றுக் கொண்டு பிறவி அற்ற நிலை



உ

க்கும் செல்லலாம். ஆனால் கீழான பிறவி அவஸ்யம் இல்லவே இல்லை இது உறுதி! இந்த ஸத்வ குணத்தில் மட்டும் புண்ணியமும் அது முதிர்ச்சியாகி தர்மமும் வளிக்கும். புண்ணியம் பிறவியை கொடுக்கும், தர்மம் பிறவியைக் கெடுக்கும். ஆனால் ரஜோகுணமும் தமோகுணமும் கிருமி கீடக முதலிய கீழான பிறவிகளும், தீய குண சகிதமான மற்றும் அனைத்துப் பிறவிகளும் கிடைக்கும் என சொன்னோம். இதன் விளக்கம் தருகிறோம் கேண்மின்.

முந்தைய யுகங்களில் இன்றைய யுகத்தைப் போல அகால மரணங்களும், கோர மரணங்களும், விபத்தின் மரணங்களும், தற்கொலை மரணங்களும் அவஸ்யம் இல்லவே இல்லை. தமக்கு மரணம் சம்பவிக்குமாயின் அது ஓர் ஐந்து தினங்களுக்குள்ளாகவே தெரிந்துவிடும். காரணம் அப்போது எந்த நோய்நொடியும் அவஸ்தைகளும் இல்லவே இல்லை. மேலும் குழந்தை பருவத்திலும் வாலிப பருவத்திலும் மரணம் சம்பவிப்பதே இல்லை. முதுமையாகி ஒன்றும் இயலாத் தன்மையாகி ஆகாரம் குறைந்து, செயல்களும் குறைந்து, சுவாசமும் குறைந்து குறைந்து அடங்கியபின் தான் தூல மரணம் சம்பவிக்கும்.

"அதன் காரணம் இறை நாட்டமும் இறைவுணர்வுமே." வேறு எந்த தேட்டமும் (தேடுவதும்) நாட்டமும் (நாடுவதும்) இல்லை. இதன் மூலகாரணமாகிய போட்டி, பொறாமை, பேராசை முதலிய எந்த நச்சுக் குணங்களும் இல்லையெனலாம். ஆகவே அவர்களுக்கு தூல மரணம் அவஸ்யம் தெரியும்.

ஆனால் இன்றைய கலியுகத்தில் அனைத்து கோர குணங்களும், கொடும் குணங்களும் சர்வ சாதாரணமாக நிலவி வருவதால் பிறப்பிலிருந்தே முதுமை வரையிலும் எந்த நொடி மரணம் சம்பவிக்கும் என்பது எவருக்குமே தெரிவதில்லை.



உ

எம் அன்பான செல்வங்களே!

விதியின்படி

"கால மரணம் சம்பவிக்கும்போது சென்ற காலத்தில் என்ன நடந்ததோ அதை எண்ணிப்பார்ப்பதும் வரும் காலத்தில் "எப்படி நடக்கவேண்டு"மென்று எண்ணமும் அந்த "**மறைமைய கற்பனையும்** கொண்டிருந்தால் அந்த எண்ணத்தின்படி உங்கள் பிறவியும் தொடரும் இது உறுதி!"

"**இங்கு உங்கள் குணதோஷமே**" காரணம்.

சில உதாரணம்!

இந்த கலியுகத்தின் பிறவியின் வித்தே மண், பொன், பெண் என மூன்றாகும். இந்த மூன்றும் முற்கூறிய குணதோஷங்களின் அடிப்படையாகும். இந்த மூவாசையே உலகின் நடை, உடை பாவனையாக அமைந்திருக்கிறது. இந்த மூவாசையினால் தோன்றிய குணங்கள் எது உங்களிடம் அதிகமாக இருக்கும் போது உங்கள் பிராணன் நீங்கினால் அவஸ்யம் அக்குணங்களின் ஆசையை பூர்த்தி செய்வதற்காக பிறவி எடுத்தே தீரவேண்டும்.

அறிவின் சிகரங்களே!

மனைவி புருஷன், குழந்தைகள் மீதுள்ள பிரியத்தாலோ, பொன், பொருள், தனம், தொழில் இவைகளின் மோகத்தாலோ, ஒருவர் சொல் செயலினால் வேகத்தாலோ, குற்ற உணர்வுகளால் மனம் குமுறும் சமயத்திலோ, மாற்றங்களினால் வரும் ஏமாற்றத்தினால் மனதின் பரதவிப்பினாலோ, கஷ்டங்களையும் நஷ்டங்களினால் வரும் கடும் துக்கங்களினாலோ இப்படி இன்னமும் அனேக



உ

பாதிப்புகளினாலோ மனம் சிக்கி எண்ணி எண்ணி
"**கற்பனையை விரித்து அழுந்தும்**" சமயங்களில்
உங்கள் பிராணன் பிரிந்தால் நீங்கள் என்னதான் சாதனை
செய்திருந்தாலும் பயன் இல்லை. அந்த எண்ணத்தின்
நிமித்தம் நீங்கள் பிறவி எடுத்தே தீர வேண்டும்.

வாழ்க்கை:- பொன், பொருள், போகம், புகழ் இவைகளோடு
வாழ வேண்டுமானால் அதற்குத் தகுந்த புண்ணி
யம் செய்ய வேண்டும் (இதை புண்ணியம் என யாம்
சொல்லமாட்டோம் அது கலிதோஷம்) இது
மேலான பிறவி என ஊர் உலகம் சொல்லும்.
இதை பிறவி எடுப்பதற்கென்றே பல தர்மங்
கள் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த பிறவியை
நல்லபிறப்பென்றும், தர்மவான் என்றும் புண்ணி
யவான் என்றும், கீர்த்திமான் என்றும் இன்னும்
பற்பலவாக பேசப்படுகிறது. இந்த பிறவியின்
வாழ்க்கை தேவையென்றால் "**ஊரோடு
ஒத்து வாழ்**"!!!

சாதனை:- வாழ்க்கை வேறு, சாதனை வேறு. சாதனை
யென்பது காட்டாற்றில் எதிர் நீச்சல் அடிப்பது
போன்றதாகும். இங்கு பொன் பொருள் போகம்
அளவோடு இருக்கும். இங்கு மானம், அவமானம்
சூடு, சுரணை, வெட்கம், ரோசம் இவை
அணுப்பிரமாணம் இருந்தாலும் நீ சாதனை
செய்ய முடியாது. "கூழுக்கும் ஆசை, மீசைக்
கும் ஆசை" என்றால் இது முடியாத காரியம்.
கூழ் என்றால் மோட்சம் (பிறவாநிலை) மீசை
என்றால் உலக வாழ்க்கை. மோட்சத்தை
விரும்பியவன் வாழ்க்கையை விட்டே ஆகவேண்டும்.



உ
பிளவுபட்ட நூல் ஊசி துவாரத்தில் எப்படி நுழையாதோ அதேபோல் அணுப்பிரமாணம் உடல் உலக பற்று இருக்குமாயின் அவன் ஸத்யத்தை அடைய முடியாது என்பதைவிட அது ஆகமுடியாது.

## முடிவான மார்க்கம்!

ஓம் தவசீலர்களே! முக்குணங்களுக்கும் தெளிவான விளக்கம் கொடுத்தோம். சத்வ குணம் மேல்நிலைக்கு இட்டுச் செல்லும் என்றும் அதுவே தர்மமாகமாறி மோட்சத்திற்கும் வழிகாட்டும் எனவும் சொன்னோம். ரஜோகுணமும் தமோகுணமும் கீழ்நிலைக்கு இட்டுச் செல்லும் என்றும் அது மேலும் மேலும் பிறப்பிறப்புகளை கொடுக்கும் எனவும் சொன்னோம். குண சம்பந்தப்பட்டு அது சம்பந்த எண்ணத்தோடு இருக்கும் போது விதியின்படி தூலமரணம் ஏற்பட்டால் அதற்குத் தக்க பிறவி உண்டென்றும் சொன்னோம்.

முதலில் யாம் கூறியபடி நடப்பதெல்லாம் நாராயணன் செயல் என்றும், எல்லாம் ஈசன் செயலென்றும், அவனன்றி அணுவும் அசையாதென்பதே வேதசாஸ்திர வசனம் இவை உலகிற்கும் தெய்வீகத்திற்குமே பொருந்தும்.

## இவை மட்டும் போதுமா?

## வேதாந்த கருத்து (பிறவாநிலை) வேண்டாமா?

நன்கு கவனிக்கவும்:- வேத சாஸ்திர கருத்துக்களில் "அவன்" என்ற இறைவன் உண்டு. வேதாந்த கருத்துக்களில் "**அவன் இல்லை**" இல்லையென்றால் "**நீயும், அவனும் அதுவும்**" ஒன்றாகி விடுகிறீர்கள்.

நன்றாக கவனி:- இந்த உலகிற்கும் அறிவினை வைத்து விளையாடும் உன் உடலுக்கும் சம்பந்தப்பட்ட வேத, சாஸ்திர, புராண, இதிகாச, மந்திர மாயாவேலைகளுக்கு



உ

# "இறைவன் என்ற அவன் உண்டு"!

அதையும் தாண்டி அதற்கப்பால் சென்றுவிட்டால் மேலே
கூறிய **அவன்** இல்லவே இல்லை. இங்கு

"**நீ, அவன், அது**" ஆக இம்மூன்றும்
ஒன்றாகி விடும். அப்படியானால் அவன் பார்த்து கொள்
வான் என்ற நிலை மாறி அவன் பார்த்துக் கொள்வான்
என்ற நிலை பெற வேண்டும். அதாவது அதுவே அவனாகிருந்து கொண்டு
உடல் உலக பந்தபாச வினைகளை பார்த்துக் கொள்வான்
அதுவே குருவாக இருந்து உன் மாயா மனதை பார்த்துக் கொள்
வார். அப்படியானால் உடல் உலக பந்தபாச வினைகளும்
இவைகளை ஆட்டிப்படைக்கும் மாயாமனமும் இல்லையானால்

## நீ யார்?

நீயே உடல் உலக பொருள்கள்! நீயே அவற்றுள் ஊடுருவி
நிற்கும் அவன்! நீயே மனமற்ற நிலையில் அது என
உணர்த்தும் குரு! இங்குதான் "**அது நீயே**" அதாவது
ஜீவன் ஈசன் என "இரண்டென்றான்"!
ஈசன் ஜீவனை இணைத்த "இரண்டும் ஒன்றென்றான்"!
இவ்விரண்டும் பரத்துடன்"
இணைந்த தன்மையினால் "ஒன்றென்றும் இல்லையென்றான்"!
அங்கு மனமற்ற தன்மையினால் "உணர்வு தெரியலையே"!

ஆகவே!

அனைத்தும் அவன் செயலென்றும் அவனன்றி அணுவும்
அசையாதென்றும் கூறும் உலக, தெய்வ நிலையில்
பேதமே! இங்கு கீழான பிறவியும் மேலான பிறவியும்
அவசியம் உண்டு. இங்கு பிறவா நிலை இல்லவே இல்லை.



## ௨

அத்வைதம் (அனைத்தும் ஒன்றே அது நாமே) சிந்தித்தாலின்றி
பிறவி நோய் நீங்காது. அவித்யா சொரூபமான உலகியல்
தர்மங்களும், மாயா சொரூபமான தெய்வீக தர்மங்களும்
முடிந்த முடிவாகாது. அதாவது பிறவா நிலையைக் கொடுக்காது.
ஆனால் உன் சாதனை முற்றுப் பெறும் பரியந்தம் அவைகள்
அவஸ்யம் தேவை. இவை எப்போது முற்றுப் பெற்றுவிட்டது
என உணர முடியும் என்றால்

உங்கள் சாதனையினால் மேலே கூறிய ரஜோ குண, தமோ
குண "**தோஷங்கள்**" முற்றிலும் நீங்கிவிட்டால்
ஸத்வ குணம் மட்டுமே உங்களிடம் எஞ்சி நிற்கும். இதை
உங்கள் அனுபவத்தால் தான் உணர முடியும். காண்பித்
தோ, சொல்லியோ விளக்கிடவோ முடியாது. அந்த ஸத்வ குணமும்
முதிர்ச்சியாகி முற்றுப் பெற்று விட்டால் அடுத்து எக்
குணமுமற்ற நிர்க்குணமே, அதாவது குணாதீத நிலையே.
அதாவது **அத்வைத நிலையே!!!**
எம் அன்புச் செல்வங்களே!

கீழே கண்ட கருத்துக்களை

அத்வைத ஞானம் உணர்வு பூர்வமாக உணர்ந்தவர்கள்
மட்டும் படிக்கலாம். அப்படி உணராதவர்கள் படித்
தால் திசை மாறி ஆஸ்திக நிலை மாறி சுத்த
நாஸ்திக நிலைக்கு மாறியதாக ஓர் உணர்வு உண்டாகி
விடும். ஆனால் நீங்களும் ஓர் கால் இந்த நிலைக்கு
வந்தே ஆகவேண்டும். இது ஆஸ்திகமும் அல்ல
நாஸ்திகமும் அல்ல; இது "**பரமார்த்திகம்**"
ஆகும். சிரமத்திற்கு மன்னிக்கவும்!



உ

# ஹே அறியாமையின் ஜீவனே!

அனைத்தும் ஈசன் செயலென்றும், அனைத்தும் நாராயணன்
செயலென்றும்; அவனன்றி அணுவும் அசையாதென்றும்
வேதாந்த முடிவில் சுத்தப் பொய்! ஜகம் ஏது? சொல்வது
அதை ரட்சிக்கும் அவன் ஏது? அதில் சிக்கித்
தவிக்கும் ஜீவன் ஏது? இவைகளுக்கு காரண
பூதங்கள் ஏது? இவைகளை ஆட்டிப்படைக்கும்
மனம் ஏது? மனத்தை இயங்கவைக்கும் குணங்கள்
ஏது? குணங்களின் அம்சமாக பிறப்பிறப்பேது?
மாயையில் சிக்கி இருக்கும் மனம் படைத்த

**மனிதா!** குடும்பம், தொழில், பணம், இவைகளில்
நீ சேகரித்த உறவுகள் இதுகாறும் பரியந்தம் அனுபவித்தது
போதாதா? பற்பல ஜனனம் எடுத்து எடுத்து அனுபவித்தது
போதாதா? மனைவி, மக்களிடம் அனுபவித்த போகங்
கள் போதாதா? உத்யோகம், பட்டம், பதவி இவைகளில்
மூழ்கிய காலம் போதாதா? லட்ச லட்சமாக வட்டி
வாங்கி கோடி கோடியாக சேர்த்த பேராசை போதாதா?

**இவை அனைத்தும் மண்தானே?**

அறியாமையின் குழந்தாய்!

எப்படியோ பூர்வபுண்
ணியத்தாலும், மஹான்களின் ஆசியினாலும், இறைவனின்
கிருபையினாலும், மேலே சொன்ன ஆசாபாசங்களி
லிருந்து விடுபட்டு ஸ்ரீ பகவத் பக்தியை செய்கிறீர்கள்.
அதையாவது உண்மையாகச் செய்கிறீர்களா என்றால்
அதுவும் இல்லை. அங்கும் வியாபார பக்தி என்றும்,
விளம்பர பக்தி என்றும் ஆடம்பர பக்தி என்றும் செய்து



உ

மேலும் மேலும் வினைகளைத்தான் தேடிக்கொள்கிறீர்கள். எங்கோ ஒருவர் அந்த உண்மை பக்தியை உணர்ந்தாலும் உங்கள் பகவானின் ரூபலாவண்யத்திலும், அவன் மஹிமைப்பிரவாகத்திலும் மாட்டிக்கொண்டு மேலும் ஜன்மாவுக்குத்தான் வழி வகுக்கிறீர்களே தவிர பிறவா நிலைக்கு உங்களை ஆட்படுத்துகிறீர்களா எனப்பார்த்தால் அதுவும் இல்லை!

அவன் அழகு உங்கள் உள்ளங்களை மயக்கவும் கிரீடிக்கவும் (விளையாடவும்) உங்கள் உள்ளங்களை தெய்வீக மயக்கத்தில்தானே ஏற்படுத்துகிறது. நன்றாக கவனியுங்கள். உடல் உலக இன்பம் சிற்றின்பம் அதாவது விஷயானந்தம்; தெய்வ நாமரூபங்களில் உங்கள் உள்ளம் மயங்கினால் அது பேரின்பம் அதாவது அது பேரானந்தமாகிவிடுகிறது. அங்கும் ஜன்மா உண்டு இங்கும் ஜன்மா உண்டே. ஜன்மரஹித நிலைக்கு நீங்கள் என்ன செய்தீர்கள்?

குழந்தைகளே!

அவன் மாயா விளையாட்டும் வேண்டாம் அவன் மாயா வடிவமும் வேண்டாம். அவை அனைத்தும் உங்கள் மாயா மனதின் கற்பனையாகும். உங்கள் மனதை மயக்கி அவைகளிலேயே எண்ணங்களை பதிவு செய்து அது பிறவியைக் கொடுக்குமே தவிர பிறவா நிலையை அவையும் கொடுக்காது. அதற்கு "**அவனை மறந்து பழகுங்கள்.**" மறந்து பழகுங்கள் என்றால் அவன் நாமரூபத்தை வெளியில் காணாமல் "**உனக்குள் உணரவும்.**" உன்னையன்றி அவன் தனியாக இல்லவே இல்லை; அவனையன்றி நீயும் தனியாக இல்லவே இல்லை. இவ்வுலகமோ உலகபொருள்களோ உன் மனோமய கற்பனையன்றி வேறு தனியாக இல்லவே இல்லை.



உ

"அந்த ஒன்றே அவன்; அவனே நீ; உன் கற்பனையே இந்த உலகம்" இதை ஓர் உதாரணமாக விளக்குவது என்றால்

**"நாழி உப்பு நாழி அப்பு (ஜலம்) நாழி ஆன வாறு போல்"** அதாவது

ஒருபடி உப்பை எடுத்துக் கொள். ஒருபடி ஜலம் எடுத்துக் கொள். இவ்விரண்டையும் ஒரே பாத்திரத்தில் கொட்டி விடுவாயாக. இப்போது அங்கு இரண்டுபடி இருக்குமா? ஒருபடி இருக்குமா? **"ஒருபடிதான் உண்டு"!**

இதை நன்றாக கவனி!

ஆகும்!

உப்பு ஜீவனாகும், ஜலம் இறைவனாகும், சுவை பராபரம்

ஜலம் இல்லாமல் உப்பில்லை, உப்பில்லாமல் ஜலம் உண்டு. ஜலம் தனியாக இருந்தால் பிரவர்த்தி இல்லை, ஜலத்தில் அதன் அம்சமான உப்பு தோன்றினால்தான் பிரவர்த்தியும் உண்டு. அதை விளக்க விகாரம் உண்டு; விகாரம் தோன்றிவிட்டால் அங்கு விவகாரமும் (பிரச்சனையும்) உண்டு. இந்த இரண்டும் இணைந்து ஐக்யமாகி விட்டால் தான் **"சுவை உண்டு"** இங்கு சுவையென யாம் சொல்வது பராபரம், பரப்பிரம்மம் என உணர்க. சுவையெனச் சொல்வது வாக்கியார்த்தமே. அதாவது வார்த்தைகளினால் சொல்லி விளக்கம் கொடுப்பதாகும்.

**"நாமே சுவையென ஆகிவிட்டால்"**

சொல்பவர் யார்? அதைக் கேட்பவர் யார்? அங்கு விளக்கம் தான் ஏது? இப்படி பகுப்பற்றுப் போகும். ஆகவேதான் "அது" "அவன்" என ஆனது; அவன் "நாம்" என ஆனோம்; நம் விளையாட்டே "உலகம்" என ஆனது. விளையாட்டின் வினையே **"நான்"**



உ

**என்றும் என்னுடையது"** என ஆனது.

ஆகவே இங்கு!

விண் மறைந்தால் விளையாட்டாகிய ஜகம் மறையும்! விளையாட்டாகிய ஜகம் மறைந்தால் விளையாடும் ஜீவன் மறையும்! விளையாடும் ஜீவன் மறைந்தால் சாட்சி ஆகிய இறைவன் ஆகும்! சாட்சியாகிய இறைவன் மாயையை விட்டுவிட்டால் "**அவன் அது**" என ஆவான். இதுதான் பிரமாண உண்மை!

ஜலம் எப்படி தம்மைத் தாமே ஓர் உப்புப் பதுமையென ஆக்கிக்கொண்டதோ அதைப் போலவே செயலற்ற காலாதீத ஒன்றே விளையாட்டின் நிமித்தம் ஜலம் (இறைவன்) என ஆகி, தம் அம்சமாகிய உப்புப்பதுமையை (ஜீவனை) உண்டுபண்ணி, தாம் அமர்வதற்கும் விளையாடுவதற்கும் ஜகத்தை உண்டுபண்ணிக் கொண்டது.

"மாவாகப் பார்த்தால் இட்லி இல்லை"!
"இட்லியாகப் பார்த்தால் மாவு இல்லை"! } அதைப் போல

உலகம் நாம் என உறுதியானால் நாம் உண்டு உலகம் இல்லை! நாம் இறைவன்தான் என்பது உறுதியானால் நாம் இல்லை அங்கு இறைவன்தான் உண்டு! இறைவனும் அதுவும் ஒன்றே என்பது உறுதியானால் அங்கு இறைவன் இல்லை "அது" ஒன்றுதான் உண்டு! அதுவும் வெங்காயம் (உள்ளி) போன்றதுதான் காரணம் உரிக்க உரிக்க தோல்தான் உண்டு. அங்கு வெங்காயம் எனச் சொன்ன ஒன்றும் இல்லைதான். அதுவே நாம, ரூப, குணம், குறி, கடந்த காலாதீத "**ஒன்று**".



உ

இந்நிலையை உன் உணர்வுபூர்வமாக அனுபவரீதியாக நீ உணர்ந்து அனுபவித்து "நீயே அவன் ஆகி, அவனே நீயாகி, இவ்விரண்டும் ஒன்றாகி" "காலாதீத நாமரூப குணம் குறி கடந்து", "அது ஆனால்"!!!

மனைவி மக்களேது? உறவு சுற்றமேது? சொத்து சுகமேது? தோப்பு துரவேது? மாடு கன்றேது? வீடு நாடேது? தாய் தந்தையேது? கணவன் மனைவியேது? நீ பெற்ற பிள்ளைகளேது? பேரன் பேத்தியேது? மாமன் மச்சானேது? அக்கா தங்கையேது? அண்ணன் தம்பியேது? வண்டு பிள்ளைகளேது? நீ தேடிய சொத்தேது? உன்னை ஆண்ட பணமேது? அப்பணம் வந்த தொழிலேது? ஆடை அணிகளேது? பாத்திர பண்டமேது? பொன் பொருளேது? உலக வஸ்துக்கள் தானேது? அவைகளை தாங்கும் உலகம் தானேது? நீ உபாசிக்கும் தேவ தெய்வங்கள் தானேது?

உலகை படைத்த அந்த பிரம்மன் தானேது?

உலகை ரட்சிக்கும் அந்த விஷ்ணு தானேது?

உலகை அழிக்கும் அந்த சிவன் தானேது?

இவைகளுக்கு சாட்சிபூதனை மகேசன் தானேது? சர்வ சாட்சியாகிய சதாசிவம் தானேது? தோன்றுத்துவைவன் யார்? இதயவாஸியார்? அந்தர்யாமி யார்? சர்வாந்தர்யாமியார்? ஆத்மா தான் யார்? பரமாத்மா தான் யார்? பரம்பொருள் தான் யார்? பரப்பிரம்மம் தான் ஏது? இவை அத்தனையையும் விசாரிக்கும் நீ தான் யார்? இவை அனைத்திலும் இருப்புக்கொண்ட "ஒன்றே" அது "இல்லையென்பதும் ஆச்சே" பிரமாணமாகச் சொல்கிறேம். "ஒன்றுண்டு" ஆனால் இல்லை!



உ

"தேவதெய்வங்களின் கற்பனைகுணானுபவ லட்சணங்கள்"!!!

"**குருடன்**" (பிரம்மா) :- மன்னிக்கவும், இவன் செயலையும் காணும்போது இப்படி ஓர் நாமம் தேவைப்படுகிறது. ஜட, கட, படாதிகளையும் (உலகையும், உடல்களையும், மரம் செடி கொடிகளையும்) சிருஷ்டி செய்யும் இவன் (இவனிடம் மனம் இல்லை, ஆனால் மாயை உண்டு) தம் யோகமாயையின் வன்மையால் மேலே சொன்னவைகளை இயற்கையின் நிலையில் சிருஷ்டி செய்தான். ஆனால் இந்த மனம் படைத்த ஜீவர்கள் தங்கள் அறியாமையினால் செய்வதறியாது, சொல்வதறியாது, ஏதேதோ கர்மாக்களை செய்தும் வாயால் பேசியும் புண்ணிய பாப கர்மாக்களைத் தேடிக்கொள்கிறார்கள். இந்த மனம் (ஆசை) படைத்த ஜீவனின் எண்ண விருத்தியை தூண்டுவது இந்த மாயா சிருஷ்டி தானே? ஏதேதோ கண்றாவியான உலகையும் உண்டுபண்ணி ஜீவனையும் உண்டுபண்ணி (ஜீவன் அவன் அம்சமே இருந்தாலும் இந்த மனதின் சேஷ்டையால் அவஸ்தைப் படுவது ஜீவன் தானே) தான் (பிரம்மா) மட்டும் மஹா மௌனியாய் நிஷ்பாவத்தை அடைந்து "**சும்மா**" இருக்கலாமோ? கண்றாவியானதைச் சிருஷ்டிப்பது ஏன்? ஜீவர்களை அவஸ்தைப்பட வைப்பது ஏன்? வினைப் பெருக்கத்திற்கு மூலகாரணமே இவன் தானே? ஆகவே இவனை குருடன் எனச் சொன்னோம்! ஆனால்?

எம் குழந்தைகளே! நாம் தான் குருடர்களாக இருக்கிறோம். நமக்கு போதும் என திருப்தி வராதது ஏன்? உடைமைகளை சேமிப்பதே பெருங்குற்றமாகும் ஆனால் கலியில் அது முடியாதது தான். இருந்தாலும் எதிலும் அதிக ஆசைப்பட்டு (பேராசையாக) பொருள்களை தேவைக்கு அதிகமாக ஏற்க முற்பட்டால் நாம் குருடர்கள் தானே. அவன் உன் ஒருவனுக்காக உலக பொருள்களைப் படைக்கவில்லை. நம் அனைவர்க்கும் படைத்தான் நாம் அதில் அதிக ஆசை கொண்டதால் குருடர்களானோம்.



உ

**திருடன்** (விஷ்ணு):— மன்னிக்கவும், இவன் செய்யும் செயல்களை காணும்போது இப்படி ஓர் நாமம் தேவைப்படுகிறது. அதாவது பிரம்மன் ஏதோ இயற்கையாக சிருஷ்டி செய்துவிட்டான் (இவனிடமும் மனம் இல்லை ஆனால் மாயை உண்டு) இந்த மாயை உபாதை தரக் கூடியது அதாவது தேவமாயையாகிய யோகமாயை உபாதை பண்ணுது ஆனால் இந்த விஷ்ணுமாயை அதாவது யோகமாயை அதாவது மலினமாயை உபாதை தரக்கூடியது எப்படி என்றால் பிரம்மன் சிருஷ்டியை மிகைப்படுத்தி, அழகுபடுத்தி, வசீகரப்படுத்தி, கவர்ச்சியை உண்டு பண்ணி, மீண்டும் மீண்டும் சுவைக்கத் தூண்டும் ஓர் "**மோஹ**" வெறியை உண்டு பண்ணுவது இந்த விஷ்ணுவாகும். இந்த யோகமாயையிலிருந்தே அதாவது மலினமாயையிலிருந்தே "**நம் மனம்**" உண்டானது. அழகு, வசீகரம், கவர்ச்சி, சுவை, இனிமை இவைகளை மறைமுகமாக அப்பொருள்களில் செலுத்திவிட்டு ஒன்றுமே தெரியாத செய்யாத "அப்பாவி" போன்று, நம்மிடம் இனிமையாக பேசி ஏதுமறியாதவன் போன்று மஹா மௌனியாய் ஜட பாவத்தை அடைந்து கபட நாடக சூஸ்திரதாரியைப் போல் இருப்பதனால் இவன் திருடன் மட்டுமல்ல,

**பக்காத் திருடனும்!!** (பக்காத் திருடன் என்றால் பக்குவமாய் சமய சந்தர்ப்பம் பார்த்து திருடுபவனாகும்)

எம் அன்புக் குழந்தைகளே! உணர்ந்து பார்த்தால் நாம் தான் பக்காத் திருடனாகவும், கொள்ளைக்காரனாகவும், கொலைகாரர்களாகவும் இருக்கிறோம். இதை உணரவும்:— நாம் தான் கண்ட கண்ட வஸ்துக்களிலும், கேட்ட கேட்ட ஓசைகளிலும், நுகர்ந்த நுகர்ந்த வஸ்துக்களிலும், சுவைத்து ருசித்த பொருள்களிலும், தொட்ட தொட்ட வஸ்துக்களிலும் மோஹத்தையும், வேகத்தையும் குரோதத்தையும், காமத்தையும், வஞ்சகத்தையும், ஈயாத லோபத்தையும், இனமத வெறியையும், ஆடம்பரத்தையும், ஷோம்பரத்தையும், வியாபாரத்தையும், விரோதத்தையும், சந்தேகத்தையும், பேராசையையும்



உ

போட்டி பொறாமையையும், களாத்தனத்தையும், சூழ்ச்சியை யும், சூதுவாதையும், பிடிவாதத்தையும், குதர்க்கத்தையும், ஆகிய இவ்வனைத்திலும் சபலத்தை (சிறிய ஆசையை) ஏற்படச்செய்து, **சிறியதாக்கி, பெரியதாக்கி, மிகப்பெரியதாக்கி** அவை நம்மை விடமுடியாமலும், நாம் அவைகளை மறக்க முடியாமலும், மிகப்பெரிய தவளையை விழுங்க முயலும் சிறிய சர்ப்பத்தை போல "**பேராசைப்பட்டு**" உலக பொருள்களில் கொண்ட மோகமே நம்மை திருடனாக்கி விட்டது. அதிலும் நம் சேமிப்பே நம்மை "**பக்காத் திருடனாக்கி**" விட்டது எனச் சொல்லலாம். நம்மை திருடன் என்றும் பக்காத்திருடன் என்றும் சொன்னதின் காரணம் அவர் சிருஷ்டியை, அவன் நமக்கு விளையாடக் கொடுத்த பொருள்களை, அவன் "**அனுமதியின்றி**" (அவன் நாமாவை சொல்லாமல்) அவனுக்கு தெரியாமல் அதாவது "**சர்வார்ப்பணம்**" செய்யாமல் நான் என்றும் எனது என்றும் என்னுடையது என்றும் "**உரிமை**" கொண்டாடியது மாபெரும் திருட்டுத்தனமாகும். மேலும்!

எம் செல்வங்களே! அவனையாம் திருடன் எனச் சொன்னது (யாம் சொல்லலாம் நீங்கள் சொல்லக்கூடாது) பக்குவப்பட்ட உள்ளங்களை திருடுகிறான் என்றும், பக்குவப்படாத உள்ளங்களையும் அந்த பக்குவத்தை கொடுப்பதற்காக விதியின்படி சோதனையும் வேதனையையும் கொடுத்து அதை பக்குவம் உண்டாக்க திருடுகிறான் என்றும் பொருள் கொள்ள வேண்டும். அவன் மாயையை வைத்துக் கொண்டு நம் வினையின்படி ஆட்டி வைக்கும் திருடன்! நாம் அவித்தையை உண்மையென நம்பி மேலும் மேலும் வினைகளை பெருக்கிக் கொள்வதில் "**பேராசை**" கொண்ட திருடன்.



உ

**முரடன்** (சிவன்) :- மன்னிக்கவும். இவன் செயலைக் காணும் போது இப்படி ஓர் நாமம் தேவைப்படுகிறது. இவன் சாமான்யமாக பிரஸன்னமாக மாட்டான். அப்படியே பிரஸன்னமானாலும் பக்தன் கேட்கும் வரங்களை பரிசீலனை பண்ணாமலேயே உடனே "ததாஸ்து" எனக் கொடுத்து விட்டு ஓடி விடுவான். பல ஆயிரம் வருஷம் ஒருவன் இவனை நோக்கி தபஸ் செய்து உடல் புற்றுமூடி தூரவம் ஜீரணித்து நின்ற நிலையிலும் இத்தனை காலமும் இப்படி கடும் தபஸ் செய்கிறேனே; என ஆர அமர இரண்டொரு வார்த்தைகள் பேசி ஓர் நல்ல முடிவெடுத்து அவன் கேட்கட்டுமே என பொறுக்காமல்;

**"சட்டி சுட்டது, கை விட்டது"**

என்ற நிலையில் "பக்தா உன் பக்திக்கு மெச்சினேன் என்ன வரம் வேண்டுமோ கேள் தருகிறேன் என்பான் சிவன்." ஸ்ரீ பகவானை கண்ட ஆனந்தத்தில் பக்தனுக்கு கையும் ஓடாது காலும் ஓடாது. எதற்காக என்ன காரணத்திற்கு இப்படி தபஸ் செய்தோம், என்ற எண்ணமும் மறந்து அந்த நொடியில் இவன் வினையின்படி ஏதோ ஒன்றை தத்துபித்தென்று பக்தன் கேட்க, வந்த பகவானும் "ததாஸ்து" என கொடுத்து விட்டு அந்த நொடியே மறைந்து விடுவான். அடுத்த நொடியே ஸ்ரீ பகவான் வந்ததற்கோ, அவன் காட்சி தந்ததற்கோ, அவன் மறைந்ததற்கோ எந்த தடயமும் இராது. இப்படி வந்து போகும் பகவானை பின் எப்படி அழைக்க முடியும் "முரடன்" எனத்தான் அழைக்க முடியும். இந்த ஸ்ரீ பகவானிடம் கருணை உண்டு, காருண்யம் உண்டு! பரிவு பாசம் உண்டு! ஆனால் அதைவிட "**அவசரம் ஆவேசமும்**" உண்டு என சொல்வார்கள் ஆனால் யாமும் அவ்வாறு கூறமாட்டோம் "கருணையே வடிவானவன் சிவன்" இது உறுதி!



உ

இந்த முரடனாகிய சீவனை வேறு தத்வரூபத்தில் சொன்னால் அது பொருந்தும். அதாவது கரணங்கள் நான்கு; அதில் மனதிற்கு தேவதை சந்திரன், புத்திக்கு தேவதை பிரம்மா, சித்தத்திற்கு தேவதை விஷ்ணு, அஹங்காரத்திற்கு தேவதை சிவன் எனச் சொல்வதுண்டு. இங்கு இந்த சீவன் நான் என்னுடையது என்ற அஹங்கார அபிமான சொரூபியாக இருக்கிறான் எனச் சொல்வதுண்டு.

அதாவது பிரம்மா உலகை உண்டு பண்ண, விஷ்ணு அழகுபடுத்த, சிவன் அவ்வு அவ்வுலகை காக்கும் நிமித்தம் அவ்வுலகை புசிக்கும் (அழிக்கும்) நிமித்தம் "நான் எனது" என்ற அஹங்கார அபிமானங்களால் தம் தொழிலை மேற்கொள்கிறான் எனப் பொருள்படும். இவன் இந்த அஹங்கார அபிமானங்களால் புசிக்காவிட்டால் மனதிற்கு வடிவமேது? புண்ணிய பாப வினைகளேது? அவ்வினைகளை மீண்டும் மீண்டும் புசிக்க எடுக்கும் பிறவி ஏது? பிறப்பிறப்பற்ற நமக்கு விளையாடும் இந்த ஜகந்தானேது? ஜகம் இல்லையானால் இங்கு முத்தொழில் புரியும் கர்த்தாக்கள் தானேது? கர்த்தாக்கள் இல்லையானால் அவர்களுக்கு ஆதாரமாயிருக்கும் அந்த பரம் பொருள் தானேது? இப்படியே ஒன்றுமே இல்லாமல் போனால் இதுபற்றி எழுதும் யாம் ஏது? ஒலி வடிவமாகிய இவைகள் இல்லாமல் போனால் இதை படிக்கும் நீ தானேது? இப்படி பகுப்பற்று போக வேண்டாம் என்றும் பகுப்பும் வகுப்பும் அதனால் பேதமும் வேண்டுமென்றே தான் "**நீயும் யாமும் இணைந்தே தான் இவ்வுலகமானோம்.**" ஐயோ பாவம் அந்த முரடனை சீவன் இருந்து விட்டுப் போகட்டும். அவன் முரட்டுத்தனமாகிய "நான் எனது" மட்டும் நம்மை பற்றாமல் இருந்தால் சரி.



௨

நாம் அவனாக இருப்போம். நாம் இருவரும் ஒன்றான தன்மையினால் "நாம், அது" ஆவோம். பின் இங்கு எந்த பிரச்சனையும் இல்லை தான். அந்த முரடன் இல்லையானால் முரண் சாதிக்கும் முரண்பாடு ஏது? அந்நிலை பெற

**"அவனை சரண் புகுவோம்" !!!**

**பறையன்** (நடனபதி): மன்னிக்கவும். இவன் செயலைக் காணும் போது இப்படி ஓர் நாமம் தேவைப்படுகிறது. இவனுக்கு மற்றோர் பெயரும் கற்பிக்கப்படுகிறது. அதாவது "சப்பாணி (நொண்டி) எனவும் சொல்லலாம். ஆனால் இந்த இரண்டு நாமாவும் காரணப்பெயருடன் அமைகிறது. அது எப்படியென்றால்

**பறையன் என்றால் பறை சாற்றுபவன்!**

**சப்பாணி என்றால் நடனமாடும் தெய்வம்!!**

குழந்தைகளே!

இந்த பறையன் என்ற வார்த்தைக்கு ஓர் பாட்டி காலத்துக்கதை உண்டு. பண்டைய காலங்களில் தூல மரணம் என்பதே கிடையாதாம். ஓர் நூற்றைம்பது இருநூறு வயது வந்தாலும் மரணம் வராதாம். வயது முதிர்ச்சியாகி நடக்கவும் எழவும் முடியாமல் போகுமாம். ஆனால் ஆகாரமும் ஜலமும் கூட செல்லாதாம். பிராணனை மட்டும் வைத்துக் கொண்டு அந்த ஜீவன் இறவாமல் ஜீவித்திருக்குமாம். இது வீட்டில் உள்ள மற்றவர்களுக்கு அதிக சிரமமாய் தோற்றுமாம். ஆகவே அப்படி வயது முதிர்ச்சியான குழியோர்களை "மதமதத்தான் தாளி" எனச் சொல்லும் தானியம் போரும் குதிருக்குள் சாய்ந்த நிலையில் அமரச்செய்து ஓர் தட்டில் சிறிதளவு சாதம், ஓர் செம்பில் ஜலம் இவைகளுடன் உள்ளே வைத்து விட்டு அக்குதிரை மூடி அப்படியே ஓர் குழி தோண்டி அதில் மண் போட்டு மூடி விடுவார்களாம். அதென்ன ஆகும் ஏது ஆகும்? என எவருக்குமே தெரிவதில்லை.



உ

தற்காலிகமாக ஓர் நூறு இருநூறு ஆண்டுகளுக்கு முன் கட்டிட நிமித்தம் வாணம் தோண்டும் போதோ, புதைபொருள் ஆராய்ச்சியிலோ அப்படி குழிகள் கிடைத்திருக்கின்றன அதில் எலும்பு கூடுகளை இன்றும் கண்டவர்கள் இருக்கிறார்கள். அக்காலங்களில் மரணம் வராத் தன்மையினால் ஜனங்கள் இறைவனை துதிக்க இறைவன் கருணையோடு ஓர் தப்பட்டை எனும் சொல்லும் பறைசாற்றும் ஓர் மேளத்தை சுமந்தவனாம் அதை டமாரம் அடித்துக்கொண்டு (பறைசாற்றிக் கொண்டு) ஓர் வார்த்தை சொன்னானாம் அதாவது (உதிர என்றால் உதிர்ந்துவிடுதல்)

“**பழம் உதிர**” (முதியவர்களுக்குமட்டும் மரணம் வருக) என பறைசாற்றினானாம்! அதன்படி வயது முதிர்ந்தவர்கள் மட்டும் இயற்கை எய்தினர். பின்னும் சிலகாலம் கழித்து நம் இறைவனும் மரணம் சரிவர நடக்கிறதா என பார்க்கும் வண்ணம் ஆவேசமாக வந்தானாம். வரும் சமயம் அதே பழைய வேடம் போட்டுக் கொண்டே பறையை அடிக்காமல் அதை தோளில் சுமந்த வண்ணம் வந்தானாம். அது சமயம் தெருவில் விளையாடும் குழந்தைகள் அவனை கேலியும் கிண்டலும் செய்து சிறிய கற்களாலும் வீசி துன்புறுத்தினர் போலும் அதனால் ஆத்திரம் அடைந்த இறைவன் கோபத்துடன் பறைசாற்றிய வண்ணம் இப்படி சொன்னானாம்.

அதாவது “**பூ உதிர, பிஞ்சு உதிர, காய் உதிர, கனி உதிர**” **என**! பறைசாற்றி விட்டு சென்று விட்டானாம். ஆகவேதான் பிறந்த குழந்தைகளிருந்து வாலிபம் வயோதிகம் வரை திடீர் மரணம் உண்டானதாம். இந்த பாட்டிகதையினாலும் அவன் பறையன் என நிரூபிக்கப்படுகிறான். உண்மையின் தத்துவத்தினாலும் அவன் பறையனாகிறான்.



உ

ஓம் ஞானமுத்துக்களே!

பறை சாற்றுபவன் பறையனாகும்
இது எம் இறைவனுக்கும் பொருந்தும். இங்கு உடுக்கை யென்பதே பறையாகும். ஓர் கரத்தில் அக்கினியை ஏந்தி இருப்பது அவன் ஒளியாகும். அதாவது ஒலியைக் கொடுத்து எழுப்பி ஒளியைக் காட்டும் நிலையாகும். இங்கு பறையென்ற அந்த ஒலியை கொடுக்கும் போது மௌனமாகவும் ரகஸ்யமாகவும் இதை உணர்த்துகிறான் அதாவது

"அறியாமையினால் உறங்கிக் கொண்டிருக்கும் ஜீவர்களே! உங்கள் அஞ்ஞானத்தை விட்டு விழித்தெழுங்கள். உங்கள் ஒவ்வொரு காலடியிலும் காலதேவன் பின்பற்றி வருகிறான். காலனை உதைத்தவனின் கால்களை (திருவடியை) பற்றி உய்வடையுங்கள்."

**"எம்மை சரண்புகுவீர்"**

என அறிவுறுத்துகிறான் எம் இறைவன். விழித்தெழுந்த உடன் எம்மை ஜோதிஸ்வரூபனாக கண்டு உணர்வீர்களாக என உணர்த்தும் நிமித்தம் ஓர் கரத்தில் தம் சொரூபமான அக்கினியை ஏந்தி இருக்கிறான். நம்மை அஞ்ஞான உறக்கத்திலிருந்து எழுப்புவதற்காக எம் இறைவன் கடும் முயற்சி எடுக்கிறான். அதாவது பறை சாற்றிக் கொண்டே கால் சிலம்பு **ஓம் ஓம்** என ஒலிக்க (கணீர் கணீர் என்று சப்திக்க. இங்கு கணீர் கணீர் என சப்திப்பது எதைக் குறிக்கிறதென்றால் குழந்தைகளே! உங்கள் பிரசாதம் அபிஷேக ஆராதனை ஆரத்தி மற்றும் எந்த பொருள்களும் எமக்கு வேண்டாம் அவை அனைத்தும் எம் சிருஷ்டியே! எம் சிருஷ்டியை எமக்கு அர்ப்பணிக்க



உ

உங்களுக்கு என்ன தகுதி இருக்கிறது? அவை வேண்டவே வேண்டாம்.
"எம்மிடம் இல்லாதது உங்கள் உள்ளம்"
மேலும் அந்த கண்ணீர் கண்ணீர் என்ற சப்தத்தின் உள் அர்த்தமாவது
கண்ணீர், கண்ணீர், கண்ணீர்.
அதை கொடு எனக் கேட்கிறான்.) நர்த்தனம் செய்கிறான்
"ஒரு பாதம் தன்னை ஊன்றி" இருபாதமும்
"ஒரு பாதம் தன்னை மாற்றி"
மாற்றி, மாறி ஆடுவதால் தான் அவனை சபாபதி என
யாம் அழைக்கிறோம். அவன் அருளாட்டம் இல்லையானால்
இங்கு இந்த ஜீவ ஆட்டங்கள் நின்றுவிடும். அனந்த
ஜீவ கோடிகளுக்கும் அவன் ஆட்டமே ஆதாரம்.

**குறவன்** (குமரன் அதாவது குழந்தை வேலன்):—
மன்னிக்கவும், இவன் செயலையும் மயக்கத்தை உண்டுபண்ணும்
அழகையும் காணும் போது இப்படி ஓர் நாமம் தேவைப்படுகிறது.
இவனை வேடன் என்றும் அழைக்கலாம். ஓர் வேடுவப் பெண்ணை
ஏமாற்றி திருமணம் செய்ததால் இவனை வேடன் என அழைக்கிறோம்.
வேடன் மிருகங்களை வேட்டையாடுபவன்.
குறவன் பறவை இனங்களை கண்ணி வைத்துப் பிடிப்பவன்.
கோடானு கோடி ஜீவர்கள் இருந்தாலும் பக்குவ ஆன்மாக்க
ளுக்கு பக்தி என்னும் போதையை ஏற்றி ஞானம் என்னும்
கண்ணியை (வலையை) வைத்துப்பிடிப்பவன் எனப்பொருள்படும்.
ஓர் இடத்தில் ஞானம் என்னும் கண்ணியை (வலையை) என்றும்
சொல்லலாம். ஓர் இடத்தில் ஞானம் என்னும் "தூண்டிலை வைத்து"
மயக்கிப்பிடிப்பவன் என்றும் சொல்லலாம். அதாவது



உ

சிவபெருமானுக்கு நாரதர் ஞானம் என்னும் கனியை கொடுக்க அக்கனி வேண்டாம் என்று

**"தாமே ஞானக் கனியாக நின்றான்"!!**

**"இது தாம் தா மான நிலை"!!!** பழனியில்.

பிரிதொரு இடத்தில் ஔவை மூதாட்டியாம் ஓர் மூதறிஞருக்கு நாவல் கனியை காட்டி சுட்டபழம் வேண்டுமா? சுடாதபழம் வேண்டுமா? என கேட்டு அவளையே திகைக்க வைத்து அதாவது சுடாதபழத்தை சுட்டபழம் என ஆக்கி **சுடாத, வேகாத, தொடமுடியாத சுத்தஞானமாக்கி பிரிதொன்றை தாமாக்கிய நிலை!!!**

ஞானம் என்னும் கண்ணியை வைத்து எனச்சொல்லும் போது பறவை இனங்களை அழிக்காமலேயே அதன் ஜீவகளைகளை மட்டும் அழித்து **"சுதந்திரப்பறவை"** (சகோரப்பட்சி என்ற ஞானப்பறவை) என ஆக்கி தான்மகிழும் **குறவன்.**

இதைப்போலவே மிருக இனங்களையும் அழிக்காமல் கண்ணி (வலை) வைத்துப்பிடித்து அதன் ஜீவகளைகளை மட்டும் அழித்து தாம் தாமாக்கிக்கொள்வான் ஆகவே இவனை **வேடன்** எனவும் அழைக்கலாம். முருகு என்றால் உருகு எனப்பொருள் முருகா என்றால் அழகா எனப்பொருள் ஓர் நிலையில் சொல்வது என்றால் **"கண்ணனும், கந்தனும் ஒன்றே!"** அதாவது விளையாட்டிலும் வினைகளைவதிலும் ஒருவருக்கொருவர் பின் வாங்கியதில்லை. இதை இத்துடன் முடிக்கிறேன்.



உ

ஓ எம் ஞானச் சிகரங்களே! இந்த ஓர் உண்மையை மட்டும் கூறி இந்த மடலை முடிக்கிறோம் நன்றாக கவனிக்கவும், ஆழ்ந்து உணரவும், இதனை "**நாமரூப குணம் குறி தோஷங்கள் விடவும்**" எம்மை மன்னிக்கவும்.

உணர்ந்து நோக்கவும்:- இவ்வுலகை உண்டாக்கி அதை அழகுபடுத்தி அவைகளை "நான் என்னுடையது" எனப்புசித்து ஆடாத ஆட்டமெல்லாம் ஆடும் இந்த கர்த்தாக்களாகிய,

**குருடன்! திருடன்! முரடன்! பறையன் குறவன்!** இவர்களிடம் சிக்கிய இந்த உலகம் படாதபாடுபட்டுக் கொண்டிருக்கிறது. இக்கலியில் இன்னமும் என்னென்னபட வேண்டியிருக்கிறதோ? யாம் அறியோம். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் ஒன்று தான் யாம் கூறிய குணதோஷங்கள் அனைத்தையும் உங்கள் "**மனதால் விலக்குங்கள்**" உங்களால் முடியும். முடியாததை இந்த வைத்தியம் அவம்யாது! இவர்கள் அனைவரையும் ஒன்றாக்கி உங்களுக்குள் கொண்டு வாருங்கள். பின் நீங்களே இல்லை அவர்களும் இல்லை இதை உங்களுக்குப் போதிக்கும் யாமும் இல்லை. **அனைத்தும் ஒன்றே! அதுநலமே! அதுவே ஸத் சித் ஆனந்தமாகும்!**



ஓம்

## ஸ்ரீ பகவான் ஸ்துதி!

ஓம் ஹரஹர மஹாதேவா, வாமதேவா, நீலகண்டா,
நீரணி முதல்வா, சாம்பசிவா, சாம்பவா, சங்கரா, சம்போ,
லம்போதரா, ஸ்மஸான வாஸா, கைலாசவாஸா, உமாபதி,
பசுபதி, பரமேஸா, திரிநேத்ரா, திரிபுரதஹனா, திரிசூலா,
காலகாலா, சர்ப்பாபரணா, பூதகணநாதா, ஜடாதாரி, பிறைசூடி,
பித்தா, கங்காசூடா, சசிதரா, நந்திவாகனா, நாகபூஷணா,
சிற்றம்பலா, சிதம்பரேசா, விஸ்வேஸ்வரா, விஸ்வநாதா,
சந்த்ரகலாதரா, டமருகநாதா, நர்த்தன சுந்தரா, நடனபதே,
ஆடலரசே என்றும்;

ஓம் ஹரி ஹரி, நரஹரி, முரஹரி, அம்புஜாக்ஷரி, அச்சுதா, உச்சுதா,
பஞ்சாயுதா, பாண்டவர்தூதா, லக்ஷ்மி சமேதா, லீலாவினோதா, கமலபாதா,
ஆதிமத்யாந்தரஹிதா, ஜோதிநித்யானந்த சொரூபா, அகிலாண்டகோடி
பிரம்மாண்ட நாயகா, அனாதை ரட்சகா, பரமானந்தா, முகுந்தா, வைகுந்தா,
கோவிந்தா, பச்சைவண்ணா, கார்வண்ணா, கமலநயனா, கமலக்கண்ணா,
ஜனார்த்தனா, கருடவாகனா, கம்சமர்த்தனா, காளிய நர்த்தனா, மதுசூதனா,
பரிபூரணா, ராட்சசமர்த்தனா, சேஷசயனா, நாராயணா, பிரம்மபாராயணா,
வாமனா, நந்தநந்தனா, சர்வகாரணா, வெங்கட்டரமணா, சங்கடஹரணா,
ஸ்ரீதரா, துளசிதரா, பீதாம்பரா, தரமோதரா, மச்சகச்ச வராகாவதாரா,
பலபத்ரா, பரமதயாபரா, சங்குசக்கரா, சர்வேஸ்வரா, கருணாகரா, ராதா
மனோகரா, ஸ்ரீரங்கா, பாண்டுரங்கா, லோகநாயகா, பத்மநாபா,
திவ்ய சொரூபா, புண்ய சொரூபா, புருஷோத்தமா, ஸ்ரீராமா, பரந்தாமா,
நரசிம்மா, திரிவிக்ரமா, பரசுராமா, சகஸ்ரநாமா, பக்தவத்சலா,
தேவானுகூலா, ஆதிமூலா, வேணுகோபாலா, மாதவா, யாதவா, ராகவா,
கேசவா, வாசுதேவா, தேவாதிதேவா, ஆதிதேவா, மஹானுபாவா, வசு
தேவதநயா, தசரததநயா, மாயாவிலாசா, வைகுண்டவாசா, ஸ்வயம்பிரகாசா,
வெங்கடேசா, ருஷிகேசா, சித்விலாசா, கஜபதி, ரகுபதி, சீதாபதி,
வெங்கடாசலபதி, மாயா, ஆயா, வெண்ணெய் உண்ட நேயா, அண்டகனோத்
தும்தாயா, நாநா உபாயா, பக்தர்கள் சகாயா, சதுர்புஜா, கருடத்துவஜா,
கோதண்டஹஸ்தா, புண்டரீகவரதா, ஓ விஷ்ணு, ஓ பராத்பரா, ஓ பரமதயாளா,
ஹரே கிருஷ்ணா, ஹரே கிருஷ்ணா, ஹரே கிருஷ்ணா என்று
ஸ்மரிக்கவும்.



ஓம் உனது அடிமை

ஐயே அது மெத்தக் கடினம்; ஐயே அது மெத்தக் கடினம்;
பொய்யாத பொன்னம்பலத் தய்யா இருக்குமிடம்;
நைய்யாத மனிதர்க்கு உய்யாது கண்டு கொள்ள!

(ஐயே)

அதைக் கண்டாரும் கிடையாது; விண்டாரும் கண்டதில்லை;
அண்டரண்ட கோடி யெல்லாம்; ஒன்றாய் அமைந்திருக்குதல்லவோ;
எளியன் சொல்லவோ? நேரமாகுதல்லவோ?

(ஐயே)

மானமிமானமற்று தானாகி நின்றவர்க்கு; சேருதிபதி போல
நாறுதிபதி உண்டு பாருமே!
கட்டிக்காருமே! ஒன்றாய் சேருமே!! உள்ளே பாருமே!!!

—x—x—x—

(ஐயே)

கருணைக் கடவே ஏழை பங்கா கார்த்திகேயனே
கந்தா! கந்தா!! கந்தா! கந்தா!!
கந்தா எமக்கு கந்த வரம் தா முருகா!

முருகா! முருகா!! முருகா! முருகா!!
முருகா, முருகா, என்று கேட்க வில்லையோ?
உருகாதோ உந்தன் உள்ளமதில் தயவில்லையோ?

(கருணை)

—x—x—x—x—x—x—x—x—

ஊரிலேன் காணியில்லை, உறவு மற்றொருவரில்லை;
பாரில் நின் பாதமீவம்; பற்றேனும் பரம மூர்த்தி;
காரொளி வண்ணா!!! கண்ணனே கதறுகின்றேம்;
ஆர்வுளார் கடைக்கண் அம்மா அரங்கமா நகருளானே!

x—x—x—x—x—x—x—x—x—x—



ௐ

ஸ்ரீ ரகுபதி உந்தன் திருமலரடிகளை
சிந்தித் திருப்பதுவும் எப்போ? எப்போ??
கூரர ஹீர சம்சார கடலை யாம்
தாண்டிக் கரையேறுவ தெப்போ? எப்போ??
காமக் குரோத லோப மோஹத்தை வெறுத்துயாம்
தாண்டிக்கரையேறுவ தெப்போ? எப்போ??
எவர் என்ன சொன்னாலும் எதிர்த்துப் பேசாமலே
மௌனமா யிருப்பதுவும் எப்போ? எப்போ??
காணும் காட்சியெல்லாம் கடவுள் காட்சியென
கண் மூடி யிருப்பதுவும் எப்போ? எப்போ??
விருப்பும் வெறுப்புமற்று வேண்டாச் செயலுமற்று
வேதனையை விடுவதுவும் எப்போ? எப்போ??

ஆட்டம் ஒன்றும் காணாமல் அசைவு ஒன்றும் இல்லாமல்
அமைதியுற் றிருப்பதுவும் எப்போ? எப்போ??
ஸத்திய வாசகமும் சத்குரு பாதமும்
சந்ததமும் எண்ணுவது எப்போ? எப்போ??

ஏழுமலை வாசா, ஏழைகளின் நேசா,
அலர் மேலு மங்கை நாதா, அடியார்கள் போற்றும் பாதா!
ஏழுமலை மீது நீ இருந்த போதும்,
எண்ணும் எளிய உள்ளம் தன்னிலும் இருப்பாய்!
வாழ்வினிலே உன்னை யன்றி யாரும் எம்மை,
வாழவைக்கும் தெய்வம் வேறு உண்டோ தேவா!

(ஏழுமலை)



உ

பஞ்சவர்கள் வாழ வஞ்சகர் பால் அன்று
உன் பாதம் நோக தூது சென்ற பரந்தாமா!
குஞ்சரம் ஒன்றன்று கூவி அழைத்த போது
அஞ்சேல் என வந்து அதை காத்த ஆதி தேவா! (ஏழுமலை)

கீதை சொன்ன கண்ணா கேசவ மணி வண்ணா
கோதை உள்ளம் கொள்ளை கொண்ட மேக வண்ணா!
சீதை மணவாளா ஸ்ரீ ராமச்சந்திர தேவா
கோமள சுகுமாரா கோபிகா மனோகரா! (ஏழுமலை)

கிரியை குடையாக பிடித்த கிரிதாரி
உரியில் வெண்ணை திருடும் பக்தர் மனசோரி
சங்கு சக்ர தாரி சாரங்க ஒய்யாரி
கேசவ கிரிதாரி மதுசூதன முராரி! (ஏழுமலை)



உ

# கற்பனையின் கதை!

ஸ்ரீ குருதேவர் கொடுத்ததோ "ஸ்ரீராமம்" என்ற மந்திரம்
பின் ஸ்வய அனுபவத்திற்கு கொடுத்ததோ சக்தி
சொரூபமான "எல்லாம் நீயே" என்ற மந்திரம்
இதன் கற்பனையோ!!!

சங்கு சக்ர, கதை, பத்மத்தோடு அலங்கார வடிவத்தின் தோற்றம்; சேஷன்மீது சயன திருக்கோலத்துடன் ஸ்ரீதேவி பூதேவி திருவடி சேவையின் தோற்றம்; வைகுண்ட வாஸனாக மகரிஷிகள் சூழ வேதகோஷம் முழங்கும் தோற்றம்; கைலையில் பனிமலையில் ஜடாதாரியாய், திரிசூலபாணியாய் சக்தி சமேதராய் தவக்கோலத்தின் தோற்றம்; கல்ஆல மரத்தின் கீழ் சின்முத்திரை காட்டி மௌனாநந்த தட்சிணாமூர்த்தியின் தோற்றம்; கால்மாறி ஆநந்த ஸ்மசான வாசனான ஆடலரசனின் தோற்றம்; விரிசடையோனாய் புவனம் அனைத்தையும் மூடி ஆகாய கங்கையை தம் ஜடாபாரத்தில் ஏற்றருளும் தோற்றம்; முருகா என்றால் அழகா என்றும் முருகு என்றால் உருகு என்றும் சுந்தரஸ்வரூபன் ஐந்து வயது பாலகன் வண்ணமயில் மீது வேலுடன் நிற்கும் தோற்றம்; கூர்வடிவேலன் மதிமுக வேலனின் தோற்றம்; ஆனைமுகமும், அகல காதும், பேழை வயிறும் கொண்ட பிரணவ சொரூபியின் தோற்றம்; முக்கால் அடி செங்கலில் தம் இரு திருவடியையும் இணைத்து அடியார்களின் இதயத்தை பிணைத்து நம்மை விட்டு அகலாத வகை விட்டலனின் சுந்தரத் தோற்றம்; பஞ்சமுக மூர்த்தியாக "ஆதிசிவமாக "மூலசிவமாக" எண்ணுவதற்கு எட்டாத தோற்றம்; துவாரகா நாதனாக ஏகசக்ரவர்த்தியாக, தர்மத்தின் மகுடமும், ஸத்யத்தின் செங்கோலுமாக ராஜ கம்பீர தோற்றம்.

இப்படியாக கற்பனை பண்ணி பண்ணி, எண்ணத்தால் எண்ணி எண்ணி, வாக்கால் புலம்பி புலம்பி நெஞ்சம் உருகி உருகி, அழுது அழுது சோர்ந்து விட்டோம் - - - - - - -



உ

ஆனால் காலாதீத அந்த ஒன்று ஓர்கால் காலத்தை தமக்குத்தாமே ஏற்படுத்திக்கொண்டு வந்தது என்று சொல்லக் கூடாது! வந்தால் சென்று விடுமே? அது அதுவாகவே இருந்தது! அதாவது ஆன்றோர் வாக்கியப்படி (இதுவும் உபசார வசனமே உண்மையல்ல)

தேடித்தேடொணாத் தேவனை தேடிக் கண்டு கொண்டோம் "எம்முள்ளே"

"ஓர் பசுக்களை மேய்க்கும் பாலகனை"

சிரசில் சுருள்முடி சாய்ந்த கொண்டை, அதில் முத்துச்சரம், ஓர் மயிலிறகு, நெற்றியில் கோபி, கருணையின் பார்வை, பவளச்செவ்வாய், அனைத்தையும் அசைக்கும் சிரிப்பு, வலக்கன்னத்தில் திருஷ்டிப்பொட்டு, தோள் இருமருங்கிலும் சுருள் கேசம், மார்பில் ஓர் துளசிமணிமாலை, அதன் மேல் ஓர் வனமாலை, தோளில் ஓர் சிறிய பச்சைப்பீதாம்பரம், இடையில் ஓர் பூந்ரசகச்சம் அமைந்த ஓர் மஞ்சள் பட்டு, வலக்கரத்தில் "அடியார்களை காப்போம்" எனை உறுதியுடன் கட்டியிருக்கும் கங்கணம், கையில் பசுக்களை மேய்க்கும் ஓர் கோல், (அதுவே குழலாகவும் மாறும்) இருகணுக்கால்களிலும் கணீர் கணீர் என ஒலிக்கும் சலங்கை, இருதிருவடிகளிலும் சங்கு சக்ர ரேகை, அடியார்களை தேடித், தேடிச் சிவந்து போன பாதம், உழைத்து, உழைத்து கருத்துப் போன கார்மேக வண்ணன், கண் அவன் வாக்குக்காக கண்ணன். இதை!!!

கண்கள் கண்டதா? இல்லவே இல்லை!

மனதினுள் தெரிந்ததா?? இல்லவே இல்லை!!

அறிவு உணர்ந்ததா??? இல்லவே இல்லை!!!

அது அது ஆனது! கண்டோம், தெரிந்தோம், உணர்ந்தோம். இதுஸத்யம்!!!



ௐ

குழந்தைகளே! பொறுமையே மாபெரும் பொக்கிஷம்!
பொறுமையே இறைசொரூபம்; பொறுமையே உங்கள் கவசம்;
பொறுமையே உங்கள் பூஷணம்; பொறுமையே உங்கள் பாடம்;
பொறுமையே ஞானசாதனை; பொறுமையில் பழுத்த பழமே
சுவைக்கும்; எட்டி உதைத்த காலுக்கு பாதணியாக இருங்கள்;
கடும் வார்த்தைகளால் சுடும் போது பேசுவதும் நீ, கேட்பதும்
நீ, வரும் வார்த்தையும் நீயென அமைதியை காத்திருங்கள்;
மானாபிமானம் சூடு சுரணை அற்றுப் போவதே பொறுமையின் சாதனை;
வேதம், சாஸ்திரம், மந்திரம், யோகம், சித்தியின் சக்தி அனைத்தும்
வேகத்தின் தாபம் இங்கு பொறுமை இருப்பதில்லை; இவைகளில்
பொறுமை இருந்தால் அனுபவமும் அமைதியும், ஆனந்தமும்
தானே உண்டாகும்; கணவன் மனைவியிடமும், மனைவி கணவனு
டனும், இவ்விருவரும் குழந்தைகளிடமும், குழந்தைகள் தாய்
தந்தையரிடமும், பிரம்மச்சாரிகள் வரும் அன்பர்களிடமும்,
வரும் அன்பர்கள் பிரம்மச்சாரிகளிடமும், இவர்கள் அனைவரும்
குருதேவரிடமும், எல்லாவற்றிற்கும் மேலாக

"குருதேவர் இவர்கள் அனைவரிடமும்"
"பொறுமையை கடைப்பிடித்தால்"
"வேறு சாதனை தேவை இல்லை இது உறுதி."

இதற்கு உதாரணம் இந்த வைத்தியமே!

உங்களுக்காகவே யாம் திருமணம் செய்து
கொண்டோம்! உங்களுக்காகவே யாம் குழந்
தைகளை பெற்றுக்கொண்டோம்! உங்க
ளுக்காகவே யாம் பெரும் தொழிலதிபரானோம்!
உங்களுக்காகவே யாம் ஸாது ஆனோம்!
(சந்நியாசி ஆகவில்லை) ஸாது என்றால் அடங்குதல்!
சந்நியாசி என்றால் அடக்குதல்! அடங்க பொறுமை
வேண்டும்; அடக்க சக்தி வேண்டும்!



உ

சக்தி சிதறடிக்கும்; பொறுமை ஒன்று சேர்க்கும்!
சக்தி உலக நிலை, பொறுமை தெய்வ நிலை; சக்தி கர்மா,
பொறுமை ஆழ்ந்த பக்தி; பொறுமையின் பெருமை
சொல்லிலடங்காது!

மனைவியிடம் பொறுமை:- உங்களை கட்டிக்கொண்டு என்ன சுகம் கண்டேன். கட்டமண்ணை கட்டி அழுதாலாவது கழுதையாவது வந்து அருகில் நிற்கும் உம்மிடம் யாரும் வரமாட்டார்கள். இடிச்சபுளியாட்டமா இருக்கிறீரே; கட்டமண்ணாவது கொஞ்சம் அசைந்து கொடுக்கும் உம்மிடம் எந்த அசைவும் இல்லையே; சொல்புத்தி வேணும் இல்லே சுயபுத்தி வேணும். இந்த இரண்டும் இல்லாத ஓர் ஜடமா? சூடு சுரணை வெட்கம் மானம் மரியாதை ஒன்றும் இல்லையே. நீர் ஓர் மனித ஜன்மாவே இல்லை, சொன்னாலும் சுணையில்லை சுட்டாலும் நாற்றமில்லை என்ன ஆளையா நீர்? உமக்கு இடுப்பில் ஓர் வேட்டி எதற்கு? பிள்ளைகளை பெத்துப் போட்டா மட்டும் போதாது! வெண்டாட்டி பிள்ளைகளை காப்பாத்தத் தெரியணும்; வெண்டாட்டி புள்ளைகளை காப்பாத்த தெரியாதவர் ஏன் கலியாணம் செய்யணும்? ஓர் காஷாயம் கட்டிக் கொண்டு போயிருக்கலாமே! இன்னும் என்னென்னவோ ஒலி அலைகள் வெடித்து சிதறும்!

அமைதி காப்போம்!

பிள்ளைகளிடம் பொறுமை:- உங்களையெல்லாம் யாரையா கலியாணம் செய்யச்சொன்னது? எங்களையெல்லாம் ஏன் பூமிக்கு பாரமாக பெத்துப் போட்டீர்கள்? பிள்ளை வளர்க்கத் தெரியாத உங்களுக்கு வெண்டாட்டி எதற்கு பிள்ளைகள் தான் எதற்கு? கண்ணை மூடியே உட்கார்ந்து எந்த கோட்டையைத்தான் பிடிக்கப்போகிறீர்களோ? உங்களை ஐயா எனச்சொல்ல எங்களுக்குத்தான் வெட்கமாயிருக்கு என இன்னமும் ஏதேதோ ஒலி அலைகள் வெடித்துச் சிதறும்!

அசாத்ய பொறுமை காப்போம்!

மாசம் சம்பளம் பெறும் முதலாளியின் வாசகம்:- உன்னை வேலைக்கு வைத்திருக்கிறேன் பார் என்புத்தியை செருப்பால் அடிக்கணும்! ஏண்டா எங்கேயோ பிறந்து என் கழுத்தை அறுக்க என்றே வந்திருக்கிறயே! கொஞ்சம் கூட விவஸ்தையே இல்லையே! ஆயுசும் இல்லே ஒரு முழக் கயிறு இல்லை செத்துத் தொலைவது தானே! நீ செத்தால் ஒரு பிடி அன்னமாவது மிஞ்சும்! உங்கம்மா உன்னை பெறுவதற்கு பதில் ஓர் ஆட்டுக்கல் அம்மிக் குழவியாவது பெத்துப் போட்டிருக்கலாம் அதாவது மாவு மசாலா அரைக்கவாவது உதவும். நான் தெண்டச் சம்பளம் மாதா மாதம் அழுவுறேன் உன் அம்மா தெண்டச்சோறு போட்டு அழுவுறா? என் பிராணனை வாங்குவதற்கு என்றே வந்து சேர்ந்தாய் போலும்?



உ

ரெண்டா மாமாங்கம் வளர்ந்துட்டே புத்தியே இல்லையே. ஒரு வார்த்தையாவது பதில் சொல்கிறாயா? கல்லாட்டமா நிக்கிறியே கல்லாவது கொஞ்சம் அசையும் அந்த அசைவும் உன்னிடம் இல்லை ஆனால் கண்ணீர் மட்டும் மாலை மாலையா கொட்டுது. உன் உடம்பில் பசையே இல்லையா? இப்படியும் ஒர் ஜன்மாவை நான் பார்த்ததே இல்லை பேச முடியலையா அல்லது பேசக் கூடாது என்ற வைராக்கியமா? கல்லுளி மங்கன் (இங்கு விழுந்த கல் உடையாது அடிக்கும் உளி மழுங்கிப் போகும்) போல் இப்படி நிக்கிறியே என இன்னமும் ஏதேதோ ஒலி அலைகள் வெடித்துச் சிதறும்!

பொறுமையின் சிகரத்தில் அசையாது நிற்போம்!

சாதுவாக தர்மம் ஏற்கும் நிலையில் வெறும் வாசகம்:- ரெண்டு சாமியார் பேரையே கெடுக்க வந்திருக்கிறியே! மாடு போல் இருக்கிறாய். உடம்பில் வலு இருக்கிறது. உழைத்துச் சாப்பிடாமல் இப்படி பிச்சை யெடுக்கிறியே. கொஞ்சமாவது வெட்கம் ரோசம் இல்லை? உன் கழியை அறுத்துப் போட்டால் 10 பேர் சாப்பிடலாம் உன் கழியை வைத்து நீ 10 பேருக்கு சாப்பாடு போடலாம். இப்படி தடிமாடு போல வந்து நிக்கிறியே பட்டையாக நாமம் போட்டு வந்துவிட்டான். இந்த நாமம் யாருக்கோ? ஊரை ஏமாற்றுவதற்கென்றே ஒர் கூட்டம் இருக்கு அதில் இவன் ஒருவன்! இப்படி இன்னமும் ஏதேதோ ஒலி அலைகள் வெடித்துச் சிதறும்!

இந்த இடத்தில் மட்டும் மௌன புன்னகையுடன் ஹேயிப்ரபோ! இது அறியாமையின் கூத்தான என கேட்ட வண்ணம் பொறுமையின் கடலென அலையில்லாத நிஷ்தரங்க சமுத்திரமென நிற்போம்! ஆனால் முன்பு கூறிய மூன்று இடத்திலும் மனம் புழுங்காது கண்ணீர் கொட்டிய வண்ணம் பேசும் வாய் பேசுகிறது, கேட்கும் காது கேட்கிறது, நமக்கென்ன மனக் கவலை என்று சிலையாக நிற்போம். அன்று நடந்தது இன்று உணர்கிறது. அடடா! எப்படி எப்படி எல்லாம் பேசினோம்? எப்படி எப்படி எல்லாம் அவைகளை கேட்டோம்? நம்மை நாமே பேசி அதை நாமே கேட்டு ரசிக்கிறோமே! என ஆனந்தக் கூத்தாடுகிறோம் உண்மையென்னவென்றால், நமக்கன்னியமாகப் பார்த்தால் கேட்பவர் துக்கரூப குணங்கள் தோன்றும். அனைத்தும் இறைவனுடைய நாமங்களோ உணர்ந்தால் ஆனந்தம் ஒன்றே தோன்றும்!



உ

ஓசுபவம், சலனம், சந்தேகம் அதனால் சங்கடப்படுவதும் குழந்தைகளே! இதைவிட அசம்பாவித சம்பவங்களும், அதிர்ஷ்டமும் ஒலி அலைகளுமா உங்களை தாக்குகிறது! இல்லவே இல்லை. இல்லையென யாம் எப்படி உறுதி கூறுகிறோம் என்றால்??? இவைகளை நடத்துவதோ, பேசுவதோ, பேசவைப்பதோ, கேட்பதோ

யாம் ஒருவன் தானே!!!

நான், நான், நான் எனமார் தட்டிக் கொள்கிறீர்களே! இது வீண் தானே! உங்களை (ஜீவனை) சாகடிப்பதற்காகவே ஒவ்வொரு இடமாக பார்த்துப் பார்த்து உங்களை பொறுக்கி எடுத்து எம் குடியில் வைத்துக்கொண்டோம்! உங்களை (அஹங்காரத்தையும், அபிமானத்தையும்) அழிக்காமல் விடமாட்டோம்! அழித்தே தீருவோம்! உங்களில் ஒருவனை விட்டுவிட்டாலும் யாம் வந்த காரியம் வீணே!

பொறுமை, பொறுமை, பொறுமை, இதுவே உங்கள் கவசம். இதுவே உங்கள் ஆளுமை. இதுவே உங்கள் சாதனை! நலம் பெறுவீர்!



ஓம்

ஓம் ஆனந்த சொரூபங்களே!

18-3-2003 தேதி செவ்வாய்

கிழமை மாலை 4-30 மணிக்கு, இந்த சுத்த பைத்தியம் காவிரிக் கரையில் ஓர் சிமெண்ட் கல்லில் அமர்ந்த வண்ணம், வறண்டு கிடந்த காவிரியையும், கிழக்கே மேகம் சூழ்ந்து எங்கேயோ இறங்கி பெய்யும் வருணனையும், அவனை சுமந்து அலையும் வாயுவையும், சற்று "உன்னிப்பாக" கவனித்தபடி புன்முறுவலுடன் சற்று உரக்க சிரித்த வண்ணம் நோக்கிக் கொண்டிருந்தோம். அது சமயம் "இறைசிந்தனை" பரிபூரணமாக அமைந்திருந்தது. அதன் காரண காரியத்தை அவன் ஒருவனே அறிவான். அது சமயம் கல, கல, கல, கல, வென்று ஓர் சிரிப்பொலியை உணர்ந்தோம். எம் அன்னை காவிரி திவ்ய தேஜஸ் உடன் வந்தாள். இனி நடந்ததை ஓர் உரையாடலுடன் தருகிறோம் "உணர்வால் உணர்க"!!!

இது காட்சியல்ல உணர்வு; படம், பாடமல்ல கல்வி, அறிவு; இங்கு காண்பவனும் இல்லை. கேட்பவனும் இல்லை;

"ஆனால் உண்மை".

புரியவில்லையா? உடல் உலக சம்பந்தம் முழுமையாக நீங்கினால் அந்த மெய் உணர்வு பெற முடியும். இங்கு அதை கேட்பவனும், அவனே; அதை சொல்பவனும் அவனே;

"சொல்லும் பொருள் அதுவே."

ஓர் பைத்தியம் சொல்வதை இன்னொரு பைத்தியம் தான் நம்ப முடியும். மற்றோர் இதை வெறுக்கலாம், அல்லது மிதிக்கலாம், உங்கள் திருவடி தானே எம் புகலிடம். இங்கு உணர்வில்லை!



உ

ஆனால் ஓர் (மெய்) உணர்வு உண்டு. ஆனால் ஓர் உண்மை!

"நம்பினோர் கெடுவதில்லை"!!!

காவிரிஅன்னை:- குழந்தாய்! நலமா?

வைத்தியம்:- ஓஎம் அன்னையே உன் பொற்றாமரை அடிகளுக்கு அனந்த கோடி நமஸ்காரம்.
"ஆனந்தமய சொரூபம்"
அம்மா! என்ன இத்தனை தூரம்? வேறு ஏதேனும் காரணமாக வந்தாயா? வரும் வழியில் இந்த வைத்தியத்தையும் சற்று பார்த்துப் போகலாம் என்ற எண்ணமா? அல்லது வேறு ஏதேனும் காரண காரியமா? அல்லது வேறு எவரையாவது காண வேண்டுமோ?

காவிரி:- ஓஎம் அருமையான குழந்தாய்! நல்ல கேள்வி களை கேட்டாய்! இங்கு உன் முன் வந்து யாம் நிற்க, வேறு எவரைப் பார்க்க வருவோம்?

வைத்தியம்:- இந்த வைத்தியத்தைத் தான் தினமும் பார்க்கி றீயே; இன்றுமாத்திரம் என்னபுதுப்பார்வை? இங்குபார்ப்பதற்கு என்ன இருக்கிறது?

காவிரி:- காரணம் இல்லாமல் வருவோமா?

வைத்தியம்:- அப்படி என்ன காரணமோ?

காவிரி:- அப்படி பெரிய காரணம் ஒன்றுமில்லை. என்றும் எம்மை பார்ப்பாய் ஓர் குறுமுறுவல் செய்வாய், அல்லது கட கடவென சிரிப்பாய் "ஐயோ பாவம்" என ஓர் அனுதாப வார்த்தையை உதிர்த்து விட்டு செல்வாய், சிலசமயம் அப்படி நீ சொல்லும் போது உன் கண்களில் கண்ணீர் பனித்து நிற்கும் அதையாம் கவனிப்போம்.



உ

கலிதோஷ விசேஷம்; எம் பரிதாப நிலை. உன் அனுதாப வாசகம், இவைகளையும் யாம் கவனித்துவிட்டு யாம் உன்னைப் பார்த்து சிரித்துக் கொண்டிருப்போம்.

வைத்தியம்:— அம்மா! இங்கு மனம் இல்லைதான் இருந்தாலும் எம் மெய்யன்பர்கள் மனம் மேலமாக உன்னைக் கவனித்து இப்படி எண்ணுவதுண்டு அதாவது இக் கலியின் பிடியில் "வற்றாத கங்கையும் வறண்டு போகும்;" இக் காவிரியின் கதி என்னே என ஒரு கணம் எண்ணுவதுண்டுதான், இருந்தாலும், "தோற்றம், இருப்பு, மாற்றம், மறைவுடன்" அந்த ஒன்றுவான இந்த ஜகத்திற்கு நாம ரூபமேது என ஆனந்தத்துடன் தான் செல்வோம். அந்த அன்பர்களின் மனம் சற்று நேரம் இருந்தாலும் அது கருணையையும், காருண்யத்தையும் காட்டி சிற்சில சமயங்களில் உருக்கத்தையும் கண்ணீரையும் காட்டி விடுகிறது.

காவிரி:— குழந்தாய்! சுகா! உன் நிலை, உன் அனுபவம் எமக்குப் புரியும், இருந்தாலும் இன்று நீ அமர்ந்த நிலை எமக்கு சற்று ஆச்சர்யத்தை கொடுத்தது. காரணம், உன் மெய்யன்பர்கள் உன் தரிசனத்திற்காக அங்கே ஆவலுடன் காத்திருக்க, இங்கு வந்து ஏகாந்தமாக அமர்ந்து எம்மையும் நோக்குகிறாய், அதோ அங்கு நின்று விளையாடும் அந்த வர்ணனையும் நோக்குகிறாய். அவனைச் சுமந்த நிலையும் வாயுவையும் நோக்கிய வண்ணம், ஏதோ கேள்வி கேட்கும் பாவனையில்



உ

அமர்ந்து விட்டாயே! உன்னை இதே இடத்தில்
இதே நிலையில் மூன்று வருடங்களுக்கு முன்
யாம் வளமாக ஓடிக் கொண்டிருக்கும் சமயம்
காண்பதுண்டு! சிரிப்பதுண்டு! பேசுவதுண்டு!!!
ஆனல் இன்று எம் நிலையும், உன் நிலையும் யாம்
நோக்கும் போது எமக்கு ஓர் ஆனந்தம் தான்
உண்டாகிறது.

வைத்தியம் :— அம்மா! உன் இந்த நிலையிலும் உனக்கு ஆன
ந்தமா? எப்படியம்மா ஆனந்தமாக இருக்க முடிகிறது?
இப்படி வறட்சியை யாம் இதுவரை கண்டதில்லை!
இந்நிலையிலும் ஆனந்தமா?

காவிரி :— கடகடவென சிரித்தாள் எம் அன்னை! யாம்
என்றென்றும் பூரணப் பொலிவுடனே இருக்கிறோம்.
ஆனல்???
கலி தோஷத்தால் (கோர எண்ணங்களால்)
பீடிக்கப்பட்ட இந்த ஜீவர்களுக்கு யாம் எப்படி
வளமாகத் தோற்றக் கூடும்? அவர்கள்
வறட்சியான எண்ணம், சொல், செயல்
அமைந்த பிறகு எம்மை எப்படி வளமாகக்
காணக் கூடும்? இந்த பழமொழி நீ அறிந்தது தானே
"இறைத்த கிணறு ஊறும்! அதை மறுத்த கிணறு நாறும்".
அவர்கள் மனம் வறட்சி ஆகி விட்டது. அதனல்
எம் சொரூபமும் வறட்சியாக அவர்களுக்குத்
தோற்றம் அளிக்கிறது. யாம் என்றென்றும் பூரண
பொலிவுடன் தான் இருக்கிறோம்! எந்த எண்ணம்
சொல், செயல் கொண்டு இவ்வுலகை நோக்கு
கிறோமோ அப்படித்தானே இவ்வுலகும் தோற்றும்.



உ

இது உன் அனுபவபாடம் தானே? நீ இப்போது எம்மை
எப்படி காண்கிறாய்?

வைத்தியம்:– யாம் உலகநிலையில் தான் இந்த கேள்வியைக்
கேட்டோம்; நீயோ ஞானநிலையில் பதில் சொல்கிறாய்.
அம்மா! உலக நிலையில் நீ இப்போது வறட்சியாக
இருக்கிறாய் எனத் தான் சொல்ல முடியும். காரணம்,
இங்கு காட்சி அப்படி. ஞானநிலைக்கு காட்சி ஏது?
வாக்கு ஏது? விளக்கம் ஏது?

காவிரி:– ஓம் குழந்தாய்! அப்படியானால் நீ இப்போது
உலகநிலை பாவனையை வைத்து உலக நிலையைப்
பற்றி கேள்வி கேட்கிறாய், அப்படித்தானே. அப்
படியானால் இந்த நேரம், "அந்த மனதை"
வைத்து சற்று விளையாடுகிறாய் எனச் சொல்.
சரி உன் கேள்வி என்ன?

வைத்தியம்:– அம்மா! உலக பாவனை கேள்வியினால் ஜல
மற்ற உன்னை வறண்ட காவிரி எனத்தான் சொல்ல
வேண்டும். இதன் காரணம் என்ன? இனி உன் உலகின்
கதை என்ன? இதே வறட்சி தானா? இனி செழுமையே
வராதா? அல்லது வறட்சியும் செழுமையையும்
மாறி மாறி காட்டுவாயா??

காவிரி:– ஓம் செல்வக் குழந்தாய் சகா! உன் நிலை
இப்போது எமக்குச் சிரிப்பாகத்தான் இருக்கிறது.
காரணம் "கலியுகத்தின் நிலையையே"
கரை கண்ட உனக்கு இது கூடத் தெரியாதா
என்ன? எம்மிடம் விளையாடுகிறாயா?

வைத்தியம்:– கடகடவென சிரித்தது! ஓ எம் தாயே!
உன்னை கேலி செய்ய யாம் யார்? நீ யார்? உனக்
கும் எமக்கும் விளக்கம் ஏது? நீயும் இல்லை, யாமும்
இல்லை, இங்கு விளக்கமும் வாக்கும் இல்லை.



உ

காவிரி:— (இடைமறித்து) குழந்தாய்! பொறு! பொறு! பொறு!
இன்று தான் உன்னிடம் சற்று பேசி விளையாடலாம்
என யாம் தான் ஓடோடி வந்தோம். உடனே
அதற்குள் "உன் நிலைக்கு" செல்வம்மாள் கிழ
டியே! உனக்குத் தான் இந்த கேலியான வார்த்தை
கற்பிடிக்கறதே!

வைத்தியம்:— அம்மா! அம்மா! பவதாரணி! இந்த வைத்தி
யத்தை மன்னித்துவிடு!
"ஓர் சுவையென்பதும் ஆனந்தம் என்பதும்"
துவைதத்தில் (இரண்டில்) தான் உண்டு! அத்வைதத்
தில் (ஒன்றில்) சுவை ஏது? ஆனந்தம் ஏது? மேலும்
உன்னிடம் விளையாட இதற்குத் தகுதி ஏது?
கலியுக தர்மமும், அதன் தோஷமும் உன் விளக்
கம் தானே! இங்கு என்ன தகுதி இருக்கிறது?
"நீ இயக்கி வைத்தாய் இக் கருவி இயங்கியது
அம்மா! எமக்கு காலங் கருமம் தோற்றவில்லை
அதன் தோஷங் கருமம் தோற்றவில்லையே!!!
என்றென்றும் "பூரணம் தான் உரை முடிகிறது
சாரி நீ வந்த காரணம் என்ன?

காவிரி:— உலக நிலையில், அந்த பார்வையில், வறட்சி
எப்படி எனத் தானே கேட்கிறாய், அதற்கு
விளக்கமாக அவ்விருவரையும் (வாயு, வர்ணன்)
யாமே அழைக்கிறோம் நீ அவர்களிடம் விளக்
கம் கேட்டு பெற்றுக் கொள் (என்று எம் அன்னை
காவிரி பேசிக் கொண்டிருக்கும் போதே அவ்விரு
வரும் வந்தனர் வரும் போதே
ஓ தாஸி அடிகளே! நலம் பெறுவாய்! என வாழ்த்
திக் கொண்டே, அம்மா! இன்று இவர் முன் ஸ்வயமே
யாய் காட்சி கொடுத்து எங்களையும் அழைத்த காரணம்
என்ன?)



உ

காவிரி:— ஓ வாயுதேவா! ஓ வர்ணதேவா! நலம் அடைவீர்களாக. இந்த சுகதேவன் ஓர் விளக்கம் கேட்டுக் கொண்டிருந்தான். நீங்களும் இங்கு அருகில் இருக்க உங்கள் இருவர் மூலமாகவும் சிவ பதில்களை கேட்கவே யாம் அழைத்தோம்.

வைத்தியம்:— ஓ எம் அன்பின் சொரூபமாயும், கருணையின் வடிவாயும் அமைந்த வாயு தேவனே! எம் வருண தேவனே! உங்கள் இருவர் பத்மபாதங்களுக்கும் இந்த தாஸியின் அனந்த கோடி கோடி வணக்கங்களை ஏற்றுக் கொள்ளவும்.
"முதலில் இந்த வைத்தியத்தை மன்னிக்கவும்."

வருணன்:— என்ன தாஸி அடிகளே! எங்கள் இருவரையும் கண்டமாத்திரத்தில், மன்னிக்கவும் என்ற ஓர் பெரிய வார்த்தையை போடுகிறீரே! நாங்களும் உம்மிடம் எதுவும் பேசவில்லை. நீரும் எதுவும் எங்களிடம் கேட்கவில்லை. இங்கும் எந்த தவறும் நடக்கவில்லை. பின் மன்னிப்பு என்ற வார்த்தை தான் எதற்கு?

வாயு:— ஏ வருணா! இது தெரியாத உனக்கு? இந்த தாஸி அடிகள் எக்காலத்தும், எவ்விடத்தும், எந்த சமயங்களிலும் பணிந்து, பணிந்து; கனிந்து கனிந்து; உருகி உருகி; அழுது, அழுது; தம் காரியத்தை திறம்பட சாதிக்கும் வல்லமை உள்ளவர். இவர் தந்தையாகிய வியாசபகவான் இவருக்கு இட்ட நாமம் திருவடி (அதாவது பணி); நம் இறைவன் இவருக்கு இட்ட நாமம் நாம்வணங்கும் ஸ்ரீ பத்மபாத தாஸி. அனேகர் இவர் வியாசபுத்திரனாக இருப்பதால் இவருக்கு இட்ட நாமம் சுகர். இவர் தம்மை எங்கெங்கு இவ்வுலகில்



உ

தோற்றுவித்துக் கொண்டாலும் அங்கங்கு இவருக்கு வழங்கும் நாமம் தாஸிபாபா. இக்கலியில் தோன்றும் மெய்யன்பர்களுக்கு பணிவு, கனிவு, உருக்கம் பெற வேண்டுமானால் இவரிடம் தான் அது தோற்றப்படுகிறது!

இந்த வார்த்தைகளின் இடையே,

இந்த வைத்தியம் ஏதும் பேசாமல் மௌனமாகவும் ஓர் உருக்கத்தின் சிரிப்பொலியுடன் எழுந்து நடக்க ஆரம்பித்தது. அது கண்டு வாயுவும் வருணனும் அந்த வைத்யத்தின் இருபுறங்களிலும் பற்றி பழைய இடத்திலேயே அமர வைத்தனர்.

வைத்தியம்:— நல்ல வேடிக்கையான, கேளிக்கையான நல்ல விளையாட்டுகள், இது உங்களுக்குத் தேவை தான். நீங்கள் உலக ரட்சகர்கள். வினையை வைத்து அடிப்பதும் பின் அணைப்பதும், பின் ஆதரவாக அணைப்பது போல் அணைப்பதும், பின் தொடையை கிள்ளி விடுவதும், பின் யாம் அடிப்பது போல் அடிக்கிறோம் நீ அழுவது போல் அழு என நாடகம் போடுவதும் உங்களுக்குக் கைவந்த கலை தான்.

"அதை உலக ஜீவர்களிடம் காட்டுங்கள் அது பொருந்தும்"

உடல் உலக நிலையில் ஓர் நடமாடும் பிணத்திற்கு சமமாயும், உணர்வு நிலையில் ஓர் வைத்தியத்திற்கு சமமாயும், தம் நிலையில் (பரத்தையே உடைய) ஓர் பரதேசியாயும், உடல் உலக பாவனையில் ஓர் சுத்த வைத்தியமாயும், எதற்குமே உதவாத ஓர் ஜடத்திடம் நீங்கள் விளையாடினால் அது அரைத்த மாவையே திரும்ப அரைப்பது போலாகும் உங்கள் காரியம் வியர்த்தமே!



உ

வாயு வருணன் இருவருமே இணைந்து ஐயா! நாரியாமா!
சற்று மொறும், மொறும், பொறும் என்றனர் பின்;

வாயு :- எம் அன்னை அழைக்கவே இங்கு வந்தோம்.

வைத்தியம் :- எம் அன்னை அழைத்தால் அவரிடம் உறையா
ருங்கள். வந்த காரண காரியத்தை அவரிடம்
சொல்லிவிட்டு செல்லுங்கள்;
இது சம்பந்தம் இல்லாத ஒன்று தானே?

வருணன் :— உம்மை வைத்துதீ தானே யாம் மூவரும் விளையாட
வந்திருக்கிறோம். நீர் "விட்டுக்கொடுப்பதில்"
நல்லவர் வல்லவர் என்றுதானே உம்மிடம் நாடி
வந்தோம். நீரே அவசரப்பட்டால் எங்களுக்கு
வேறு போக்கிடம் ஏது?

வைத்தியம் :— நீர், நீர் (ஜலம்) தானே? அதாவது மழை தானே
நீர் அப்பு (ஜலம்) தானே? அப்படியானால் இப்
புவியில் இப்படி வறட்சியை உண்டுபண்ண
லாமா? உணவு இல்லாமல் கூட சிலகாலம் என்ன,
பலகாலமும் இருந்து விடலாம். ஆனால் ஜலமும்
காற்றும் இல்லாமல் இருக்க முடியாதே ஆனா
லும் யோகத்தை முறையாக அனுஷ்டித்து
அவர் சித்தபுருஷர் ஆகிவிட்டால் இந்த இரண்
டும் இல்லாமலும் பலகாலம் இருக்கலாம் என
சொல்லக்கேள்வி. ஆனாலும் எம் சுய அனுபவத்
தில் உணர்ந்தவரை அப்படி இரண்டும் இல்லா
மல் எவரும் இருந்தது கிடையாது தான். சரி
அந்த கதையெல்லாம் நமக்கு எதற்கு?
நீர் ஆகிய நீர் இல்லாமல் எதுவும் நடைபெறாது.
ஆமாம் வருண தேவா! தெரியாமல் தான் கேட்
கிறேன் சாதாரண மேகத்திற்கும், கார் மேகத்
திற்கும், மழை ஜலமாகிய உமக்கும் என்ன
சம்பந்தம் என சற்று சொல்லுங்களேன்?



உ

வருணன் :- ஐயா! தாஸ் தேவனே!
வைத்தியம் :- (இடைமறித்து) யாம் தேவனுமல்ல, தேவ
குமாரனுமல்ல; தேவதூதுவனும் அல்ல, தேவர்
மூவரும் அல்ல
சர்வ சாதாரண நிலையிலுள்ள பக்தர்கள்
"பாத தாஸியாகும்"
சும்மா எந்த அடைமொழியும் இல்லாமல் எந்த
உயர்வார்த்தையையும் கொடாமல் "ஏ தாஸ்"
எனமட்டும் அழைத்தால் அது போதும்!!!
வாயு :- ஐயா! தாஸ்! உம்மை பூலோக வாசிகளும் உம்
மெய்யன்பர்களும் எப்படி வேண்டுமானாலும் அழைக்
கட்டும். நாங்கள் "மகாத்மா" என அழைக்கிறோம்
பரமாத்மா என்றழைத்தாலும் உமக்கு கோபம்
வரலாம், அப்படி ஒருவர் எங்களுள் இருக்கிறார்.
நீரோ "ஆத்ம தர்ஸனி" ஆகையால் இதை நீர்
மறுக்கமாட்டீர், மறுக்கவும் முடியாது!
வைத்தியம் :- ஓம் தேவாதிதேவர்களே! வாதம் நமக்கேத
ற்கு? இங்கு விகாரமும் இல்லை, அதனால் எந்த
வியவகாரமும் இல்லை அதாவது விகாரம் என்றால்
நாமரூப குணபேதம், வியவகாரம் என்றால் அதனை
ஒட்டியும் அபிப்ராய பேதமாகிய பிரச்சனையாகும்.
நீங்கள் எப்படி அழைத்தாலும் ஏதோ ஓர் நாம
ரூபத்தை குறிப்பிடுகிறீர்கள், பரவாயில்லை. உங்
கள் சித்தம் என் பாக்கியம். என சிரம் தாழ்த்தி
நின்றோம். இனி உம் கேள்வியை கேட்கலாம்.
வாயு :- கேள்வி கேட்பது நாங்களா? நீர்தானே ஏதோ
விளக்கம் பெறலாம் என சங்கல்பித்தீர்.
வருணன் :- ஹே மகாத்மா! உங்கள் அன்பர்கள் மனதில் நீர் தா
னே ஏதோ விளக்கம் பெறலாம் என சங்கல்பித்தீர்.



உ

ஸத்திய ஸங்கல்பனை உம் ஸங்கல்பத்தினால்,
அந்த ஸங்கல்பத்திற்கேற்ப, நாங்கள் மேவும்
"உமக்கு தற்காலிக சொரூபிகளாகவும்"
என்றென்றும் அரூபிகளாகிய நாங்கள்
"உமக்காக வந்த வடிவங்களிது"
எங்களை தோற்றுவித்ததும் நீரே! எங்களிடம்
உரையாடுவதும் நீரே! அதன் பதிவாக அமைவதும்
நீரே! "அதன் பலன் பெறுவதும் நீரே!!!

எம் குழந்தைகளே! இங்கு இந்த ஸர்வார்ப்பணம் இவ்விதம் முடிவுற்றது. இனி ஸத்யவாக்கு ஆரம்பமானது!

வைத்தியம்:— சற்றுமுன் யாம் கேட்ட மூன்று கேள்விகளுக்கும் விடை தாருங்கள்.

வாயு:- ஓ மகாத்மா! சாதாரண மேகமானது அது ஜலமற்றது

1. அதாவது உயிர்நாடியான ஜலமில்லாத மேகமாகும். இது பூமி மீது ஆங்காங்கே காணப்படும். இது சூர்ய வெய்யிலின் வெப்பத்தால் ஆங்காங்கே தோன்றும். இவற்றின் அளவு என்றென்றும் குறைவதில்லை, வாயுவாகிய யாம் இவைகளை அடித்து சிதறி பூமியின் எல்லாப் பாகங்களுக்கும் கொண்டு செல்வோம்.

2. கருமேகமானது அது சூல் கொண்ட மேகம், அதாவது மழை ஜல கருவுற்ற மேகம். இது எங்கெங்கெல்லாம் நீர்நிலை உள்ளதோ அதாவது கடல், ஏரி, குளம், குட்டை, நதி, ஆறு ஆகியவற்றில் சூரியனின் கதிரியக்கத்தால் அந்த ஜலங்களை நீராவி ஆக்கி அதை ஏற்றுக்கொண்ட தன்மையால் நீர் நிரம்பிய மேகம்.
3. மழை ஜலம் என்பது சிற்சில இடங்களில் குறிப்பிட்ட காலங்களில் மழை பெய்யும் விதியிருந்தால்!



உ

சாதாரண மேகமும் இந்த கார் மேகமும் இணையும். அப்போது அவைகளுக்கு குளிர்ச்சி தேவை; அவை மலை சிகரம், அல்லது மரங்களின் அடர்த்தி, அங்கிருந்து அந்த குளிர்ச்சி கிடைக்கும்.

அந்த குளிர்ச்சியின் உதவியால் ஆங்காங்கு சில குறிப்பிட்ட இடங்களில் மழையாக பொழிவோம். பொலியவும் செய்வோம். (பொழிவது = மழை கொட்டுவது) (பொலிவது = தூரவாக மழையை காட்டுவது) இதில் கார்மேகம் வருணனுவான்; அவனே குறிப்பிட்ட இடங்களுக்கு சுமந்து செல்வது வாயுவாகிய அடியோம் ஆவோம்.

வைத்தியம்:— உங்கள் அனுபவங்களில் வந்து பார்த்தால் நீங்கள் குறிப்பிட்ட இடங்களில் இடியுடன் மழை பெய்தோம் என நீங்கள் இருவரும் குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆனால் அங்கு பார்த்தால் இடி இடிக்கிறது, மின்னல் மின்னுகிறது; மழையைத்தான் காணோம்! ஒரு பெண் முற்றம் தெளித்தால் சற்று தண்ணீர் ஒரு நிலையில் குளிரத் தெளிப்பாள். ஆனால் நீங்கள் மழை பெய்த இடம் பார்த்தால் விழுவது போல் நளினமாய் அதி ஆச்சரியமாக மழை பெய்து வந்து விடுகிறீர்களே அது எப்படி உங்களால் முடிகிறது?

வருணன்:— ஐயா மகாத்மா! அந்தந்த இடங்களில் அந்தந்த ஜீவர்கள் எந்த அளவில் "புண்ணியம்" செய்திருக்கிறார்களோ, அந்த அளவில் மழை வருவிக்கும். இங்கு ஜீவர்கள் என யாம் குறிப்பிட்டது மனித இனத்தை மட்டுமல்ல அனைத்து ஜீவர்களையும் குறிப்பிடுகிறேன்.

வைத்தியம்:— ஐயா வருண தேவனே! அனைத்து ஜீவ கோடிகளையும் என தாங்கள் குறிப்பிடும் போது, மனித இனம் ஒன்றே பகுத்தறிவுள்ளது. மற்றவைகளுக்கு இல்லை என தாங்கள் அறிந்தது தானே? அவைகள் எந்த அளவில் எந்த வகையில் பாப புண்ணியம் தேடும்?



உ

வருணன்:— ஓ மஹாத்மா! இது நல்ல கேள்விதான் ஆனாலும்
இதை உணர வேண்டும். மனித இனத்தைத் தவிர மற்
றும் அனைத்தும் பகுத்தறிவு இல்லாதது தான்; ஆனாலும்
கண்ணுக்குத் தெரியாத கிருமி கீடகத்திலிருந்து, பெரிய
உருவமாகிய யானை வரை, மனித வர்க்கம் உட்பட
"ஜீவர்கள்தானே?" அங்கு புண்ணிய பாபத்
திற்கேற்ப நாமரூபம் அமைகிறது" அவ்வளவு
தானே? இதை கவனிக்கவும்!

புண்ணிய பாபம்:— இவைகளில் கோடானு கோடி வித்யாசம்
உண்டு. பெரிய புண்ணியம், சிறிய புண்ணியம்; கரும்பாபம், நல்ல
புண்ணியம்; தோஷம் நிறைந்த பாபம், குணம் நிறைந்த புண்ணியம்;
பஞ்சமஹா பாபம்; கோதானம், பூமிதானம், அன்னதானம்,
சொர்ணதானம், பற்பல வேள்விகள் இப்படி பற்பல செய்த
புண்ணியம்; என இன்னமும் நிறைய உண்டு.
ஐயா மஹாத்மா! இப்படி அனேக சிக்கல்கள்
நிறைந்தது தானே "ஜனன மரணம்". ஆகவே
இவர்கள் அனைவரும் வருணனாகிய எம் மழைக்கு
கட்டுப்பட்டவர்களே!

வைத்தியம்:— அம்மா! வருணன் என்றாலும் ஜலம்; கங்கை
காவிரி என்றாலும் ஜலம்; இதில் உலக நியதியில்
ஆண்பால் என்று ஆண்களையும், பெண்பால் என்று
பெண்களையும் குறிப்பிடுவதுண்டு. ஆனால் இங்கு
வருணன் என்றும் கங்கை காவிரி என்றும் நாம
ரூபம் வேறுபடுகிறது ஆனால் இயக்கமாகிய ஜலம்
ஒன்றுதானே தென்படுகிறது!

காவிரி:— குழந்தாய்! இது நல்ல கேள்விதான்! ஒன்றை
உணர்; உடலில் மூக்கின் வழியாக செல்லும்
மூச்சுக்காற்று ஒன்றுதான், அது உடல் உள் சென்று
இயங்குவது ஐந்து நிலைகள் ஐந்து பெயரும் பெறுகிறது;
பிராணன், அபானன், சமானன், வியானன் உதானன்



உ

என ஐந்தாகும். செவியும் வாயு ஒன்றுதான்; செவியும் இடம், இயங்கும் தன்மை, என்று ஒன்றே ஐந்தாக பிரிவது போல்;

வருணன் என்ற ஒன்றே, மேலே ஆகாய கங்கை என்றும், பாதாள உலகத்தில் பாதாள கங்கை (மந்தாகினி) என்றும், இப் பூலோகத்தில் கங்கா, யமுனா, சரஸ்வதி, பிரம்மபுத்ரா, நர்மதை, கோதாவரி, துங்கபத்ரா, காவேரி என்று இன்னும் பலநாமமா பெறுகிறது. ஆணும் பெண்ணும் இவைதானே இன்றைய உலகசாஸ்திரம்.

ஆண்பால் = வருணன்; பெண்பால் = ஏனைய நதிகள்.

ரூபம் (தோற்றம்) ஒன்று; ஆனால் இடம் கண்டு, நிலை கண்டு, செயல் கண்டு நாமம் வேறுபடுகிறது!

மேலும் ஆகாயத்தை ஆகாயவாணி என்றும், பூமியை பூமிமாதா என்றும், ஜீவநதிகளை பெண் இனமாகவும் இதைப்போல் இன்னும் அனேகம் சொல்லலாம். இவைகளை ஏன் மாதா, அதாவது அன்னையாக அழைக்கிறோம் என்றால்,

குணசொரூபத்தில்; பொறுமை, அன்பு, கருணை, மறத்தல் மன்னித்தல், எதையும் பணிவுடன் ஏற்றுக் கொள்ளுதல் அன்னையாகும். சமுத்திரமும் எங்கள் அம்சமாக இருந்தாலும் அதை கடல் அரசன் அல்லது சமுத்ரராஜா என ஆண்பாலைத்தான் குறிக்கும்.

“ஆண் என்றால், அஹங்காரமல்ல, அதிகாரமல்ல”. “ஆண் என்றால், அறிவு, சாந்தியாகிய சத்வகுணம்”. இந்த சத்வகுணம் என்ற அறிவு சொரூபத்துடன், (ஆண்பாலுடன்) மேலே சொன்ன அனைத்து குணங்களின் அன்னை சொரூபம் இவைதே தெய்வீகம்” அதுவே தேவ தெய்வங்கள்.



உ

வைத்தியம் :- அம்மா! உன் விளக்கம் சாதனையாளர்களுக்கு
அவஸ்யம் தேவைதான். ஐயா! வாயு தேவனே!
உம்மை ஒன்று கேட்கிறோம் அதாவது
சுழிக் காற்று என்றும், சூறாவளி என்றும், புயல்
என்றும், தென்றல் என்றும் நான்கு விதமாகச் சொல்
கிறார்களே இது உண்மையா?

வாயு :- ஓ எம் அன்பான மகாத்மாவே! இவை நான்கின்
நிலைகளிலும் யாம் ஒருவனே இயங்குகிறோம்

தென்றல் :- அப்போது நாம் நால்வரும் அமர்ந்திருக்கும்
இந்த வேளையில் மழை மேகம் சூழ, எம் வேகம் இல்
லாமல் மிதமாக வீசும் போதும், மரம் செடி கொடி அடர்
ந்த இடங்களில் மிதமாக வீசும் போதும், எம்மை
இதமாகவும் மிதமாகவும் உணரும் போது அங்கு யாம்
தென்றலாவோம்.

புயல் :- இது அதி (அசுர) வேகத்துடன் கூடியதாகும். மலை
புல், பூண்டு இவைகளைத் தவிர மற்றும் கண்ணில்
காணும் அனைத்தையும் அசைக்கவும் முடியும், ஆட்ட
வும் முடியும், தாள்பரத்தவும் முடியும். இந்த இடத்
தில் புயல் என நாமம் பெறுவோம்.

சூறாவளி :- இது சுழற்சியின் வேகத்தோடு கூடியதாகும்.
புயல் ஆரம்பம் சமுத்திர மையம் ஆகும். புயலின்
முடிவு எந்தெந்த பொருள்களை எங்கெங்கெல்லாம்
அடித்தெடுத்து எங்கு போட வேண்டுமோ அங்கே
போட்டுவிட்டால் புயலின் வேகம் அடங்கும். ஆனால்
சூறாவளியின் ஆரம்பம் பொட்டல் காடு, அது ஒடு
ங்கும் இடம் மரம் செடி கொடிகள் அடங்கிய புதர்
ஆகும். இதன் சுழற்சியின் வேகத்தினால் பெரிய
மரம் முதல் கொண்டு மற்றும் அனைத்தையும் வேரோடு
தாரோடு பிடுங்கி பூமியில் மேல் பரப்பில் தூக்கி
சுழற்றி எறிந்து சர்வநாசம் செய்ய முடியும்.



உ

சுழிக் காற்று:- இதுவும் சூறுவளியைச் சேர்ந்தது தான். அதுவும் வேகம் கடுமை இராது. இது தோன்றும் இடமும் பொட்டல் காடே; இது குப்பை கூளங்களை அள்ளிச் சென்று ஆகாயம் வரை பறந்து எதனை எங்கே போட வேண்டுமோ அது அதை அங்கே போட்டு விட்டு ஓய்ந்து விடும்.

வைத்தியம்:- ஐயா வாயுதேவனே! நீர் வேகம் கூடி, மண்ணை வாரி இறைக்கும் போது, நல்லவன் கெட்டவன், பக்தன் பாமரன் என வித்தியாசம் பார்ப்பதில்லை போலும்? அதனைவேயே உலகோர் இப்படி சொல்வதுண்டு. "இருப்பவன் வாயிலும் மண்; இல்லாதவன் வாயிலும் மண்" என்பார்கள். அங்கு வஞ்சகம் இல்லாமல் அனைவர் வாயிலும் மண்ணை அள்ளி இறைக்கிறீர்.

வாயு:- ஐயா! இதை இன்னோர் இடத்திலும் சொல்வதுண்டு. இறந்த ஒருவனை குழியில் போட்டு மூடும் போது, (அவன் வாயில் மண்ணை அள்ளிப் போடும் போதும்,) மேலே சொன்ன தராதரம், பாரபட்சம் பார்க்காமலும் இந்த வாசகத்தை சொல்வதுண்டு.

வைத்தியம்:- ஐயா வாயுதேவனே! நீர் இந்த உடலில் பஞ்சபிராணன் என இயங்குகிறீர். இந்த ஐந்திற்கும் தனித்தனி இயக்கம் உண்டு. பிராணனாகிய காற்று வெளியே போவதும் உள்ளே வருவதுமாக போக்குவரவினாலே தானே மூச்சாகிய உயிர் இருக்கிறது?

வாயு:- ஆமாம் இது நீர் அறிந்தது தானே?

வைத்தியம்:- இந்த உயிர் மூச்சை வைத்து ஒருவனுக்கு ஆயுள் நிர்ணயிக்கப்படுகிறதா? அல்லது புண்ணிய பாப வினையின் முடிவான பிராரப்தத்தை வைத்து ஒருவன் ஆயுள் நிர்ணயிக்கப்படுகிறதா?

வாயு:- இரண்டையும் வைத்தே தான் ஆயுள் நிர்ணயிக்கப்படுகிறது. அதாவது பிராணன் போக்குவரவு இவ்வளவு என கணக்கை வைத்து, அதற்குள் புண்ணிய பாப கர்மாவை முடிக்க வேண்டுமென ஓர் சூத்திரத்தை வைத்து இந்த



இரண்டையுமே இணைத்துத் தான் ஆயுள் நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது.

வைத்தியம்:- அப்படியானால் பிராணன் போக்குவரவை சற்று தாமதப்படுத்தி ஆயுளை நீடிக்கும் பண்ணலாமா? அதனால் கர்மாவும் பெருகுமா? இல்லை உள்ள கர்மா தான் சற்று விரிவடைந்து கொடுக்குமா?

வாயு:- அதனால் உள்ள கர்மா தான் அனுபவிக்கப்படும், வேறு கர்மா தொடராது. அஹங்கார அபிமான தோஷ கர்மாக்கள் இருந்தால் அந்த கர்மா பெருக்கத்தால் உடல் ஜீணிக்கவும் வாய்ப்புண்டு, பிறவியும் அவசியம் உண்டு. ஆனால் சாதனை செய்து பிராணன் போக்குவரவை குறைத்தால் ஆயுளும் சற்று நீடிக்கப்பண்ணலாம். பிராரப்த கர்மாவும் வலு இழந்து அனுகூலமாகவும் இருக்கும்!

வைத்தியம்:- சாதனையென்பது பிராணாயாமம் என்ற யோக சாதனை செய்துதான் மூச்சுக்காற்றை குறைக்கமுடியுமா? அல்லது வேறுமார்க்கம் உண்டா?

வாயு:- ஹே மஹானுபாவா! அனைத்தும் அறிந்தும், உணர்ந்தும், உம் சுயஅனுபவத்திலேயே உம் குழந்தைகளுக்கு அனுபவ பாடமாக உணர்த்தியவரும் தாங்கள், இவ்வேழை அடியேனிடம் பாடம் கேட்பதுபோல் கேட்கிறீரே! இது உம் நிலைக்கு பொருந்துமா? அல்லது எம் நிலைக்குத் தான் தகுமா?

வைத்தியம்:- அது அப்படி அல்ல வாயுபகவானே! "கற்றது கைமண் அளவு, கல்லாதது உலகளவு" என்றார்கள் நம் பெரியோர். அதுவும் உம் போன்ற மஹான்களிடம் ஒரு வாக்கியம் அவர்கள் வாயிலாக கேட்டு எம் குழந்தைகளுக்கு புகட்டினால் அது எத்தனை பெருமையும் தரும், சாதிக்கும் பொறுமையும் தருமே.

வாயு:- ஹே தயாநிதி! எம்மை சோதிக்கிறீரா?

வைத்தியம்:- உம்மை சோதிப்பதற்கு யாம் யார்? தெரிந்த ஒன்றை இருவர் உரையாடி ஓர் முடிவு கண்டால் அந்த முடிவு இருவருக்கும் பெருமை தருமே! "சிறு துரும்பும் பல் குத்த உதவுமே" என்றபடி அறிந்தவர் யார்?



அறியாதவர் யார்? நம் அனைவருள்ளும் அந்த ஒன்று
தானே இருக்கிறது. "பணிவே பாதை"
உம்முள் இருந்து உணர்த்துவதும் அந்த ஒன்றே!
எம்முள் இருந்து உணர்வதும் காலாதீத ஒன்றே!! அந்த
இவற்றை உணர்ந்து சர்வசதா ஆனந்தமாயிருப்பதும், ஒன்றே!!

வாயு:- ஓம் சர்வக்ஞ மஹாத்மா! இப்படி ஓர் சாதனையாளன்!!
தம் நிலையில் பணிந்தாலே போதும் அவன் அது ஆவன்!!
இது உறுதி!
நீர் கேட்கும் ஸ்தானத்திலிருந்து கேட்கிறீர்!
அதன் இருபையினால்!
யாம் சொல்லும் ஸ்தானத்திலிருந்து சொல்கிறோம்!!

ஹே மஹாத்மா பிராணாயாமம் என்ற யோகப் பயிற்சியினாலும், அந்த
பிராணனின் போக்குவரவின் வேகத்தை குறைத்து
"ஆயுளையும் நீடிக்கலாம்; கர்மாவையும் சுகமாக
அனுபவிக்கலாம்."
"மனதில் உள்ள ஆசைகளை குறைத்து குறைத்து
தேய்த்து தேய்த்து "அடக்கி அழிப்பதனாலும்";
ஆயுளையும் நீடிக்கலாம், கர்மாவையும் சுகமாக அனுபவிக்கலாம்."
ஆனால்?
அங்கு பிராணாயாமம் என்ற யோக சாதனையினால் மனம் அழியாது
அங்கு மனம் அடங்கும். "இச்சை அற்ற இடம் அகம்பேய் ஏம்
இறை கண்டாயே" என்றபடியும், "ஆசை அறுமின், ஆசை
அறுமின்; ஈசனோடு ஆயினும், ஆசை அறுமின்" என்றபடியும்.
"ஆசை அறுபடாமல் பிறவி நோய் அறுபடாது".
ஆகவே பிராணாயாமம் என்ற யோகத்தினால் ஆயுளை நீடிக்கப்
பண்ணலாமேயன்றி பிறவி நோயும் அறுபடாது; அதற்கு
வித்தான ஆசைகளும் முழுமையாக அடங்குவதும் இல்லை,
அவை முழுமையாக அழிவதும் இல்லை.



உ

நன்மை தீமையை ஆராய்ந்து அறிந்து, நன்மையை மட்டும் ஏற்றுக்கொண்டு தம்மனோவன்மையினாலும், இறை இருமையினாலும், சத்குரு கடாட்சத்தாலும், தீமையை அழிக்க வேண்டும். இவை மூன்றிற்கும் நம்பிக்கையும் சிரத்தையும் (வைராக்யம்) தான் முக்கிய இடம் பெறும்!!

“மலின ஆசைகளை உடனே கொல்லவும்;”
“கடின ஆசைகளை சமயம் கண்டு கொல்லவும்;”

இச்சாதனையை ஏற்றுக் கொண்டால்

1. “வாயுவாகிய எம்மை அடக்கவும் முடியும்”!
2. “ஆயுளையும் சற்று நீடிக்க வைக்கமுடியும்”!!
3. “பிராப்த கர்மாவை சுலபமாக அழிக்கவும் முடியும்”!!!
4. “ஆகாமிய கர்மா பெருகாமலும் பார்க்கமுடியும்”!!!!
5. “நீயே அந்த காலாதீத ஒன்றாகவும் முடியும்”!!!!!

“இதுவே வேதவேதாந்த முடிவாகும்”!

வைத்தியம்:— மிக்க நன்றி. உம்மை இன்று தரிசித்ததற்கு மாபெரும் பாக்யம் பெற்றோம்! உம் ஸ்ரீ பாதகமலங்களுக்கு எம் அனந்தகோடி நமஸ்காரங்கள். ஐயா! வருணபகவானே! பாபங்களை சுட்டெரிக்கும் சூரியன். ஆனால் நீரோ புண்ணியங்களை சற்று குளிரப்பண்ணுகிறீர். ஆனால் இந்த ஜனங்கள் சூரியனின் உஷ்ணத்தை சற்று தாங்கி, குடையில்லாமல் நடந்து சென்று விடுகிறார்கள். ஆனால் தாங்கள் சற்று தூறல் போட்டாலும் உடனே குடை பிடித்துக் கொள்கின்றனர் அல்லது தூறல் விழாத இடங்களுக்கு தம்மை ஒதுக்கிக் கொள்கிறார்கள்.

அதாவது? → அதை ஏற்கும்

பாபத்தை எரிக்கும் அவர்களுக்கு புண்ணியத்தை ஏன் சற்று தாங்கமுடியவில்லை? அது ஏன்?



உ

வருணன்:- ஹே மஹானுபாவா! இக்கலியில் இச்ஜீவர்களுக்கு புண்ணியம் காப்பாற்றும், பாபம் மிக காப்பாற்றும் தான். அதை இன்பமாக எண்ணம், சொல், செயலால் செய்து முடிக்கிறார்கள். ஆனால் பாபத்தை பாபம் என்றே தெரியாமல் செய்கிறார்கள். இங்கு இவர்கள் கர்மா எப்படி அமைகிறது என்றால், இது நன்மை என்றே கருதி செய்வர்; ஆனால் அது தீமையாகமுடியும்; ஆனால் இவர்கள் அதை தீமையாக அறியார். நன்மை செய்து விட்டோம் என்று தம் அஹங்காரத்தினாலும், அபிமானத்தினாலும் ஒர் இன்பம் அடைவர். இது ஆசைவசப்பட்ட கர்மாவாயிருப்பதனாலும், எதிர்பார்ப்போடு இருக்கப்பட்ட கர்மாவாயிருப்பதனாலும் அதன் முடிவு துக்கமயமே!

கர்மாவின் சூக்ஷுமத்தை

ஆகவே சற்று மழையில் நனைந்தாலும் உடனே சளிபிடித்து (துன்பத்தை கொடுத்து) அவஸ்தையை உண்டுபண்ணுவதால் அதை ஏற்க மறுக்கின்றனர்; தம் இயல்பான தன்மையினால்! ஆனால்?

சூரிய வெய்யில் அப்படி அல்ல; அது பாபத்தை சுட்டெரிப்பது தமக்கு தோன்றவில்லையானாலும் தம் இயல்பாகவே அக்காரியம் நடைபெறுகிறது. இதன் முக்கியம் என்னவென்றால்

மழை:- ஆசைவசப்பட்டு எதிர்பார்ப்புடன் செய்யும் கர்மாக்கள்

வெய்யில்:- பாபம் எரிக்கப்படுவதால் வரும் நன்மை!

(இது மறைபொருளாக இருக்கிறது)

வைத்தியம்:- ஓஹோ வருணதேவனே! இப்பூலோகத்தில் ஒர் பழமொழி சொல்வதுண்டு அதாவது

"இல்லாத மேகத்திற்கு இருக்கிற மழை" என்றும்,

"இருக்கின்ற மேகத்திற்கு இல்லாத மழை" என்றும்,

சொல்கிறார்களே அதன் பொருள் என்ன?

வருணன்:- எம்மைப் போட்டு குழப்புகிறீரே! இது பழமொழியாகத் தோன்றவில்லையே! ஏதோ காரணப் பெயர் எனத் தோன்றுகிறதே?



உ

வைத்தியம்:— இதுகாரணப் பெயரோ காரியப் பெயரோ
யாம் அறியோம். ஆனால் கிராமங்களில் இப்படி
சொல்லக் கேள்விப்பட்டதுண்டு. அதனாலேயே இது
பற்றிக் கேட்டோம்.

வருணன்:— உமக்கும் புரியவில்லையென்றால் விண்ணுலக
வாசியாகிய எமக்கு எப்படிப் புரியும்?

வைத்தியம்:— உண்மையாகவே புரியவில்லையா?

வருணன்:— ஆமாம் ஐயா! புரியவே இல்லை.

வைத்தியம்:— சரி அதை விடும்! அதோ ஓர் எட்டு கிலோமீட்டர்
தூரத்தில் எடப்பாடி என்ற கிராமத்திற்கு கிழக்கே
ஓர் ஆறு கிலோமீட்டர் தூரம் பரப்பளவாக நீர்
பொழிந்து கொண்டிருக்கிறீரே அது உமக்குத்
தெரிகிறதா? போய்ப் பார்த்துத்தான் சொல்லவேண்டுமோ?

வருணன்:— ஓ மஹாத்மா! சரியாக பக்கத்தில் இருந்தே அளவு
எடுத்துச் சொன்னது போல் சொல்கிறீரே. இது
எப்படி இவ்வளவு துல்லியமாகச் சொல்ல முடிகிறது?
அம்மா காவிரித் தாயே! உமக்குத் தோன்றுகிறதா?
ஹே வாயு தேவனே! எம்மை நீரே சுமந்து வந்து ஆங்
காங்கே மழையாக பொழிய வைக்கிறீரே, இந்த
தூரம் அளவு எல்லாம் உன்னால் நிர்ணயம் பண்ணமுடி
கிறதா? வெகு ஆச்சர்யமாக இருக்கிறதே!

காவிரி:— ஐயா மஹானுபாவா! வருண தேவனே! எம் குழந்தை
கேட்பது உம்மிடம், எம்மிடம் அல்ல. அது கேட்ட
கேள்விக்கு பதில் சொல்லும்!

வாயு:— ஹே வருணா! வசமாக மாட்டிக் கொண்டோம். உம்மை
சுமக்கும் எமக்கே இந்த தூரத்தின் கணக்கு தெரிய
வில்லை. இந்த வயதான பாபா இத்தனை கணக்காக
சொல்கிறார், என்றால் வேடிக்கையாகத்தான் இருக்கிறது.
இவருக்கு எந்த சித்துக் கருமம் கிடையாது. எந்த வித்தை
கருமம் தெரியாது சரி அவரிடமே கேள்.



உ

வைத்தியம் :— யாம் என்ன கேட்டுவிட்டோம்? இப்படி எல்லோ
ரும் குழம்புகிறீர்கள்? இதற்கு சிக்கலும் வேண்
டாம், எந்த சக்திகளும் வேண்டாம், மன்றாங்கட்டையும் வேண்டாம்.

"இது பார்வையின் உறுதி"

சரி அது போகட்டும். நீங்கள் இருவரும் உங்கள்
அலுவலகத்தில் என்ன குறிப்பிட்டு விட்டு வந்திருக்கிறீர்கள்?
இந்த இடத்தில் இடியுடன் கூடிய மழை பொழிவோம்.
என்றுதானே? ஆனால் அங்கு அவ் வாயு நடைபெறு
கிறதா? கருமேகம் தெரிகிறது! மழை கனமாக இற
ங்கி விழுவது போல் தெரிகிறது! ஆனால் அங்கு
"கூடியிருக்கும் கருமேகத்திற்கும்" அங்கு
"பெய்யும் மழைக்கும் சம்பந்தம் இருக்கிறதா"?
இதற்குத்தான் அந்த கிராமிய பழமொழியைச்
சொன்னேன். அங்கு

"மேகம் இருக்கிறது ஆனால் மழை இல்லை"

சிலசமயங்களில் மேகம் அடர்த்தி
இல்லாமல் வெகு வெகு குறைவாக இருக்கும் ஆனால்

"மேகம் இருக்காது ஆனால் பலத்த மழை உண்டு"

இதற்கு அந்த பழமொழி பொருந்துமா? பொருந்தாதா?

வருணன் :— இந்த பூலோகத்தில் இப்படி ஓர் அருமையானவரை
இன்றுதான் இங்குதான் காண்கிறேன்!

வாயு :— நீர் ஓர் அபூர்வமான பிறவி ஐயா!

வைத்தியம் :— அபூர்வம் அதிசயம் எல்லாம் இருக்கட்டும். உங்கள்
வாக்கின் எழுத்திற்கும், இந்த செயலுக்கும் சம்பந்தம்
உண்டா? அங்கு மழையே இல்லை வெறும் தூறல்தான்
என்கிறேன் யாம்; ஏன் இந்த பொய்க்கணக்கு? இங்கு
தான் இந்த ஜீவர்கள் அறியாமையினால் தவறு செய்
கிறார்கள் என்றால் அறிவோடு கூடி இருக்கும் தாங்கள்
தவறு செய்யலாமா? இப்படித்தான் நீங்கள் கரு
ணையை பொழியும் லட்சணமா?



உ

வருணன்:— ஹே தயாநிதி! இப்படி எங்கள் கணக்கை கேட்கும் நாங்கள் ஆவோக வாசிகளாகிய அவர்கள் கணக்கை யும் பார்க்க வேண்டாமா? இப்படி பெரியவராகிய நாங் கள் பாரபட்சம் காட்டலாமா?

வைத்தியம்:— பாரபட்சம், குற்றம் குறைகள், அறியாமையினால் உண்டாகும் ஆவோக வாசிகளுக்குப் பொருந்தும். ஆனால் தெய்வ அம்ஸம் பெற்ற நாங்களைப் போல் உள்ள மனிதர்களுக்குப் பொருந்தாதே! ஆவோக வாசிகளுக்கு அனைத்து குணங்களும் உண்டு, தேவ தெய்வங் களுக்கு தண்டிப்பும் கண்டிப்பும் இருந்தால் அது உங்களுக்குப் பொருந்தாதே.

(ஏக குணம் கூடாதே! (ஸத்வகுணம்))

வருணன்:— ஹே தயாஸாகரா! நீர் சொல்வது உண்மை தான் ஆனால் இந்த உண்மையையும் நாங்கள் அறிந்த வரே அறியாதவர் அன்று, ஆனாலும் சொல்கிறோம்.

"நாங்கள் (தேவர்கள்) தேவதைகளே" (தெய்வமல்ல)

"விஷ்ணு, பிரம்மா, சிவன்" அம்மேவமே தெய்வம் விநாயகன், முருகன், அம்மேவரின் அனைவரும் "தெய்வ அம்சம் உள்ளவர்களே"! (தெய்வம்அல்ல)

அதைப்போலவே கண்ணன், ராமன், மற்றும் சிறு தெய்வங்கள் தவிர ஏனைய மூர்த்திகள் அனைவரும்

தெய்வ அம்ஸம் பெற்ற **"அவதார சொரூபிகளே"!!**

தெய்வத்திடமும், தெய்வ அம்ஸம் பெற்றவர்களி டமும், தெய்வ அம்ஸம் பெற்ற அவதார சொரூ பிகளிடமும், ஏக குணம் "ஸத்வ குணம்" ஒன்றே காணப்படும். அங்கும் "கண்டிப்பும் தண்டிப்பும்" அவஸ்யம் இராது. "இது தான் உண்மை" மற்றும் இந்திரன் உட்பட தேவர்கள் அனைவரிடமும் அனைத்து சிறு தெய்வங்களிடமும் "அனைத்து அம்பாளிடமும்" கண்டிப்பும் தண்டிப்பும் உண்டு! தெய்வத்திடமும்,



உ

தெய்வ அம்சம் பெற்றவர்களிடமும், தெய்வ அவதார சொரூபிகளிடமும், கண்டிப்பும் தண்டிப்பும் அவஸ்யம் கிடையாது. ஆனால் அப்படி இருப்பதைப் போல் புராணங்களிலும், மற்றும் இதிகாசங்களிலும், கதைகளிலும், மற்றும் கதை சொல்பவர்களும், "அப்படி வர்ணிக்கிறார்களே என்றால்";

உப்பு சப்பில்லாத சுத்தான்னத்திற்கு;

உப்பு சப்போடு கூடிய "ஊறுகாய்" சேர்ப்பது போன்று "பொய்யான கதைக்கு அப்பொய்மையையும் சேர்த்தே சொல்கிறார்கள்"! "அவை உண்மையல்ல"!!!

அப்படி சொன்னால்தானே கதை சுவாரஸ்யமாக இருக்கும்!

வைத்தியம்:— ஓ எம் வருண தேவா! இன்று உம் மூலமாக சில தேவ தெய்வ ரகஸ்யங்களை எம் குழந்தைகள் உணர்ந்து கொண்டார்கள் மிக்க நன்றி! அதுவும் உம் வாக்கால் கேட்டது "பிரம்மரிஷியாகிய வஸிஷ்டர் வாயிலாக பிரம்மரிஷி பட்டம் கேட்டது போல் ஆகிறது"! இனி எம் கேள்விக்கும் பதில் சொல்லும்! அதாவது அறியாமையின் ஜீவர்கள் தவறு செய்யலாம் ஆனால் அறிவுடன் கூடியவர்கள் தவறு செய்யலாமா?

வருணன்:— சிரித்துக்கொண்டே ஹே மஹானுபாவா! நாங்கள் அறிவோடு கூடி இருந்தாலும் "தொழில்" நிமித்தமாக "அஹங்காரத்துடன்" தான் கூடி இருக்கிறோம்! ஆகையால் இந்நிலை ஏற்பட்டது. மேலும் தேவர்களுக்கு ஜீவர்களால் யாகத்தில் செய்யும் "அவிஸ்" தான் ஆகாரம்; "சோமபானம்" என்ற மதுதான் எங்களுக்கு "ஜலபானம்". ஜலம் இங்கு கிடைக்கிறது. ஆகாரம் பூலோகத்தில் தான் கிடைக்கிறது! நாங்கள் என் செய்வோம்? அதுதான் உம் கலியுக தர்மத்தில்



உ

அழகாக சித்தரித்திருக்கிறீரே! அதுபோதும் அதன்படி இச்சீவர்களை எல்லாம் பண்ணைச் சொல்லும். நாங்களும் மழையை ஏராளமாகப் பொழிகிறோம்!

இனி "அது உங்களால் முடியாது"!
"இதுவும் எங்களால் முடியாது"! ஆனாலும்

இதன் பழிபாவங்களை "கலி தோஷம்" என்றுக் கொள்ளும்.

ஆமாம் மஹாத்மா! அங்கு வழுந்த மழையில்லை. இலேசான தூரலிதான் எனை எப்படி இங்கிருந்து உம்மால் நிர்மாணிக்கமுடிகிறது?

வாயு:— ஹே வருண! அவரிடம் ஏதாவது கேள்வி கேட்டு மாட்டிக்கொள்ளாதே. அவர் நம் தேவலோகத்தில் பதிவு செய்ததையே நேரே பார்த்தது போல் இங்கு இவ்விடத்தில் அத்தனைகளைக்காக சொல்கிறார். பின் இப்படி சமீபமாக நடைபெறும் காரியத்தை கண்டு சொல்லமாட்டாரா என்ன?

வைத்தியம்:— ஐயா தேவர்களே! இதற்கு ஞானக்கண் தேவையா? ஊனக்கண் போதுமே!

காவிரி:— ஓ எம் மைந்தா! ஊனக்கண்ணா? அது என்ன? அதை இப்போதுதானே இங்குதான் கேள்விப்படுகிறோம் அதை சற்று விளக்கவாமா?

வைத்தியம்:— ஓ அம்மா! இது ஒன்றும் அப்படி வித்தையும் அல்ல. வேடிக்கையும் அல்ல. ஊனியின் பார்வை அதி கூர்மையானது.

"ஞானக்கண் என்றால் அறிவோடு கூடி அதனுடன் இருப்பது".

"ஊனக்கண் என்றால் தீட்சண்யமான புத்தியோடு கூடி கற்பனையை விரிக்காமல் கூர்மையாக்குவது"!

காவிரி:— இதை எவரிடம் கற்றுக் கொண்டாய்?

வைத்தியம்:— எம் ஸ்ரீ குருதேவராகிய தந்தையிடம்!



உ

வருணன் :— ஹே மஹாத்மா இதன் சாதனை என்ன?

வைத்தியம் :— ஹே வருண தேவனே! இதற்கு சாதனை தேவையில்லை.
“பார்வையும் அதைச் சார்ந்த கேட்பதும்”
ஒன்றுபடுத்த வேண்டும், இங்கு எந்த சந்தேகமும்
வரவே கூடாது!

“சந்தேகமான அசைவே” நம் பரம எதிரி ஆகும்!
பெரும்பாலும் இந்த திறன் எல்லோருக்கும் வாய்ப்பதில்லை.
இங்கு உங்களைப் போல் மஹான்களின் ஆசியாலும்
தெய்வ கிருபையாலும், ஸ்ரீ சத்குரு கடாட்சத்தாலும்
அதுவே அதற்கு ஏற்படுத்திக் கொண்டது!

வாயு :— எந்த இடத்திலும், எந்த நிலைகளிலும், எவரிடம் பேசினாலும்
சர்வஜாக்ரதையாக இருந்து கொண்டு
“பணிவே பாதை”
என்பதை நிரூபித்துவிடுகிறீரே! இது எப்படி ஐயா! உம்மால் சாதிக்க முடிகிறது?

வைத்தியம் :— நல்ல வேடிக்கையான கேள்வி! ஆமாம் நீங்கள்
மூவரும் இங்கு எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் எப்படி
கூடினீர்கள்? இந்த வைத்தியம் காரணமா? அல்லது
எம் அன்னைதான் காரணமா? அல்லது நீங்கள் இருவரும்
தான் காரணமா? நீங்கள் மூவரும் இதை எதிர்பார்க்க
வில்லை; இந்த வைத்தியமும் இதை எதிர்பார்க்கவில்லை
ஆனால் கூடியிருக்கிறோம்!

காவிரி :— ஆமாம் குழந்தாய்! நீ சொல்வது உண்மைதான்.
எல்லாம் அந்த பரம் பொருள் கிருபையே!

வைத்தியம் :— அம்மா! சுமார் மூன்று வருடங்களுக்கு முன் அழகாக
பொங்கி வந்தாயே; அதுவும் ஓர் இருபத்தி நான்கு
தினங்கள்; அது சமயம் இந்த வைத்தியமும் தினமும்
உன்னை கண்டு களிக்குமே!



உ

காவிரி:— உண்மைதான். காலங்கள் மாறுகின்றன!
பருவங்களும் மாறுகின்றன! தோற்றங்களும்
மாறுகின்றன! ஆனால் உன்னிடம் எந்த
மாற்றமும் தோற்றமில்லையே காரணம் என்ன?

வைத்தியம்:— பலமாக சிரித்துக்கொண்டே, நல்ல வார்த்தை
சொன்னாய் தாயே! அம்மா! ஒன்று என வந்தால்
அது இரண்டாகமாறும்; அது சிலகாலம் இருக்கும்!
பின் அதுவே ஒருகமாறும்; பின் ஒவ்வொன்றும் மறையும்;
"இது தோற்றத்திற்குத் தானே!"
என்றும் ஓரியல்பாக இருக்கும் ஒன்றிற்கு தோற்றம்
மாற்றம் மறைவு ஏது? இது தாங்கள் அறியாததா?
ஆனால் உலகநிலையில் ஓர் கேள்வி கேட்கிறேன்
தவறு இருந்தால் மன்னிக்கவும்.

காவிரி:— கேள் மகனே கேள்!

வைத்தியம்:— இன்று இப்போது இந்த நாலக் (மனக்) கண்கள்
மூலமாக காண்கின்றேனே, உன்னிடம் ஓர்
வறட்சி, இதற்கும் காலம் உண்டல்லவா?
இப்படியே இருந்துவிடமாட்டாயே!

காவிரி:— எம் குழந்தாய்! இது (கலி) காலத்தின் கோலமே
தவிர வேறில்லை. நீயும் தான் உன் சித்தர்கள் பாடிய
பாடலை பாடத்தின் நிமித்தம் சொல்வாயே! அதாவது
தோன்றின மறையும்; மறைந்தன தோன்றும்!
பெருத்தன சிறுக்கும்; சிறுத்தன பெருக்கும்!!
தொன்றன அனைத்தும் அனைத்தும் நினைக்கொன்றன!
தின்றன அனைத்தும் அனைத்தும் நினைத்தின்றன!!
இப்படி சொன்ன அனைத்தும் "இயற்கையின்
நியதி" இதை எவரும் மாற்றவோ, மறுக்கவோ,
விலக்கவோ முடியாது இங்கு சிரம் தாழ்த்தி
பணிவுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும்!



உ

இயற்கையின் நியதிக்கு நாம் மட்டும் என்ன விதிவிலக்கோ?

"வளமான காட்சியை பார்க்க வேண்டுமென்றும் பார்! வறட்சியான காட்சியை பார்க்க வேண்டுமென்றாலும் பார்!

இது மற்றவர்களுக்கும் பொருந்தாது அதனால் உனக்கும் பொருந்தும்.

மனமெனும் கற்பனைக்கண் கொண்டு பார்த்தால் வறட்சியும் செழுமையும் உண்டு! அதாவது! அறிவுக்கண் கொண்டு உணர்ந்தால் அவ்விரண்டும் இல்லை!!

வைத்தியம்:- ஓ எம் அருமைத்தேவர்களே! ஓர் சிறிய கேள்வி கேட்டு முடித்துக் கொள்கிறோம். அதாவது, இங்கு தேசிய வாசகம் என அனேகம் உண்டு. அதில் உங்களுக்கு சம்பந்தம் இல்லைதான்; ஆனாலும், இரண்டு வாசகங்கள் மட்டும் உங்களோடு சம்பந்தப்பட்டவை. அவையாவன;

1. "மரம் நடுவோம், மழை பெறுவோம்!

2. "மழை நீரை சேகரிப்போம்!! என இரண்டாகும்.

இது பற்றி உங்கள் அபிப்ராயம் என்ன?

வருணன்:- உம் கலியுக லோகத்தின் தேசிய வாசகங்கள் இருபத்திநான்கையும் படித்திருக்கிறோம். அவைகளை எங்கள் உலகத்தில் சொல்லி சொல்லி அனைவரும் சிரிப்பதுண்டு, "ஆனாலும் அதுபற்றி வருந்துவதும் உண்டு" ஆனால் இந்த வாசகங்களை இப்பொழுதுதான் கேள்விப் படுகிறோம். பூலோகத்தில் இப்படியும் அறியாத மாந்தரா? ஆச்சர்யமாக இருக்கிறதே!

வாயு:- மழை பெய்தால் தானே மரம் நட முடியும்! மழை பெய்தால்தானே மழை நீரை சேகரிக்க முடியும்!! இது எப்படி அவர்களுக்கு தெரியாமல் போய்விட்டது?

வருணன்:- ஹே மஹானுபாவா! இப்படியும் விபரம் தெரியாமல் இவர்கள் எப்படி வாழ்கின்றார்கள்!

வைத்தியம்:- ஐயாமார்களே! அது அப்படி அல்ல; அவர்கள் ஆராய்ச்சியாளர்கள் அவர்கள் ஆய்வில் அப்படி தோன்றுகிறது அதனால் அப்படி என்று இருக்கிறார்கள்.



உ

வருணன்:— எப்படி அவர்களுக்கு தோன்றுகிறது அந்த
விளக்கம் தானென்ன?
வைத்தியம்:— அவர்கள் தேவதெய்வங்களுக்கு முக்யத்வம் கொடுப்
பதில்லை. அதனால் உங்கள் அவையினின் பெரியவும் எந்த
"நம்பிக்கையும்" இல்லை. சமுத்திரம் இருக்கிறது அது
வற்றப் போவதில்லை. சூரியன் இருக்கிறான். அவன்
என்றென்றும் மாறவோ, மறையவோ போவதில்லை.
சூரிய உஷ்ணத்தால் கடல் நீர் நீராவியாக மழை
மேகமாகி மலைகளிலும் மரங்களில் உறைந்து
மழைபெய்கிறதென "ஆகோளா ஆராய்ச்சி" சொல்
கிறது. ஏன் இந்த வைத்தியமும் ஓர் காலம் படித்த
துண்டு. அனேகரிடமும் சொல்வதுண்டு!
வருணன்:— ஏன் இந்த எஃயம், அதில் உண்டாகும் ஆகுதியாகிய
அவிஸ். அந்த அவிசை உண்டால் தான் தேவர்கள்
ஜீவிக்க முடியும். அவர்கள் ஜீவித்திருந்தால் தான்
மழை பெய்ய முடியும், என்ற விபரங்களை சொல்லிக்
கொடுப்பவர்கள் எவரும் இல்லையா?
வைத்தியம்:— அப்படி எழுதியவர்களும் போய் விட்டார்கள்!
அதை சொல்லியவர்களும் போய் விட்டார்கள்!!
அதைமுறைப்படி கேட்டவர்களும் போய் விட்டார்கள்!!!
இப்போது இருப்பவர்கள் எல்லாம் விஞ்ஞானிகளும்,
ஆராய்ச்சியாளர்களும், பகுத்தறிவாளர்களும்
தான். பகுத்தறிவாளர்கள் என்றால் "புத்தியின்
கற்பனையை பெருக்கி" அதைஅவசி ஆராய்ச்சி
செய்பவர்கள் எனப் பொருள்.
வருணன்:— ஹேமஹாத்மா! இதை கவனியுங்கள் மழை பெய்தால்
தானே வீட்டிலோ, காட்டிலோ மரம் நடலாம்.
அப்படி அல்லாமல் தினமும் ஜலம் கொண்டு விட முடியுமா?
மழைபெய்தால் தானே வீட்டிலோ, வெளிமுற்றத்திலோ
குளம் குட்டைகளிலோ மழை நீரை சேகரிக்க முடியும்?
இது விதியின் சதியாகும்! அவர்களை சொல்லி குற்றமில்லை.



உ

வைத்தியம்:— இப்படி விபரம் தெரியாத மாந்தர் வெளியே பேசுவது என்னவென்றால்?
"காலம் கெட்டுப் போச்சு" என்றும் அதனால் "வானம் பொய்த்துப் போய்ச்சு" என மேலெழுந்த வாரியாய் பேசிக் கொண்டிருக்கிறார்கள்!
அடே அறிவில்லாத மனிதா! நீ கெட்டுப் போனாயே! உன் உள்ளம் கெட்டுப் போனதே!

**பொருளை நம்பாதே!**
**வாழவைப்பவனை நம்பு!! அவன் கொடுத்த பொருளை நம்பாதே!** அதை **கொடுத்தவனை நம்பு!!** உடல் உறவு **ஆட்டத்தில் மயங்காதே!** உன்னை **ஆட்டுவிப்பவனை உணர்!!**
**பசி, பணம்; பகவான்; எனப் போகாதே! பகவான், பணம்; பசி எனவே வருவாயாக!!**

ஓ எம் அரும் தவக் குழந்தைகளே!
அம்மூவரின் ஆசியுடன் இந்த இதழை முடிக்கிறோம்! உலகம் கெட்டாலும், ஊர் கெட்டாலும், உன் சமூகம் கெட்டாலும், உன் குடும்பம் கெட்டாலும்,
நீ கெடாமல் அந்த ஒன்றிலேயே ஒன்றுவாயாக!
**நலம் பெறுவாய், சுகம் பெறுவாய்!!!**
இதுவே எம் ஆசி!!


அன்பின் குடில்
எல்லாம் நீ!
Adobe of Love
You are Everything!